* THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" I am sorry I could not give an exhaustive list. But I may assure the hon. Member that the question of coconuts and tapioca also is being looked into by this Government as well as the Government of India."

* SRI V. MUTHU :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சபைமுன் பிருக்கும் இந்த ஆண்டு வரவு செலவு திட்டத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகின்றேன். கடந்த இரண்டு மூன்று நாட்க ளாக இது பற்றி சபையில் விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. எப் போதும் வரவு சிலவு திட்ட விவாத ஆரம்பத்தில் ரொம்ப காரசாரமான விவாதங்கள் நடக்கும். ஆனால் இந்த ஆண்டு வரவு சிலவு விவாதத்தில் சில சமயம் சபையில் அங்கத்தினர்கள் கூட இருப்பதில்லை. கேட்பதற்கு காலரியில்கூட சில சமயம் ஆட்கள் இல்லாததன் காரணமென்ன ? எப் போதும் எதிர் கட்சிக்காரர்கள் சண்டைப் பிரசங்கம் பண்ணுவார்கள். அதைக் கேட்க மக்கள் வருவார்கள். அதெல்லாம் இந்த ஆண்டு எதிர் பார்க்க முடியவில்லை. காரணம் என்னவென்றால் ஆரம்பத்திலேயே சில எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் இந்த வருஷ வரவு சிலவுத் திட்டம் பொது வாகவே சில நல்ல திட்டங்களோடு அமைந்திருக்கின்றன என்று கூறி விட்டார்கள். ஆதரிக்கக்கூடிய முறையிலே அமைந்திருக்கிறது என்றும் சில எதிர்கட்சி அங்கத்தினர்கள் சொன்னார்கள். அம்மாதிரி தான் அமைந் திருக்கிறது. 11–30 a.m.

" முதலாவதாக மந்திரியவர்களின் வாவு சிலவு திட்ட உரை தமிழில் அச்சடிக்கப்பட்டு கொடுக்கப்பட்டிருக்கிறது வரவேற்கத்தக்கதாகும். இது நமது ஈ. வே. ரா. பெரியார் அவர்கள் இந்த நாட்டில் இப்பொது ஒரு " பச்சைத் தமிழன் ஆட்சி" நடக்கிறது என்று கூறியதை உறுதிப் படுத்துவது போல் அமைந்திருக்கிறது என்று சொல்லலாம்."

SRI S. RAMALINGAM :—" யார் அப்படிச் சொல்லுகிறார்கள் ?"

* SRI V. MUTHU :—" எல்லோரும் தான் சொல்லுகிறார்கள். இந்த மாகாணம் தற்போது பச்சைத் தமிழன் ஆட்சியை நடத்துகிறது என்று பலர் சொல்லுகிறார்கள். ஆகையால் தான் அதற்கு ஏறக் குறைய ஒரு வழி காட்டுவது போல் இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டம் தமிழில் அச்சடிக்கப்பட்டு கொடுத்திருப்பது அமைந்திருக்கிறது. இது மிகவும் வரவேற்கத்தக்க விஷயம்."

SRI G. GOVINDAN :—" கனம் அங்கத்தினர் அவர்கள் பச்சைத் தமிழன் என்ற வார்த்தையைக் கூறினார்களே, அதற்கு என்ன அர்த் தம் ? "

SRI V. MUTHU :—" செந்தமிழ், கருந்தமிழ் என்றிருப்பதுபோல் பச்சைத் தமிழன் என்று இருக்கலாம்."

SRI S. RAMALINGAM :—" கருந்தமிழ் என்று கிடையாது. கன்னித் தமிழ், செந்தமிழ் போன்றவைகள் தான் இருக்கிறது."

SRI V. MUTHU—" இதுவரை செந்தமிழ், கருந்தமிழ் என்று தான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் பச்சைத் தமிழ் என்பது எனக்கும் புரியவில்லை."

DEPUTY SPEAKER :—" பேசுவோருக்கே புரியவில்லை என்றால் ஏன் அதைப் பற்றி பேச வேண்டுமென்று கேட்கிறேன்."

* SRI V. MUTHU :—" கனம் நிதி மந்திரி அவர்கள் எல்லோ ருடைய மனதையும் கவரக்கூடிய முறையில், பல நல்ல அபிவிருத்தித் திட்டங்களோடு இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித் திருப்பது மிகவும் வரவேற்கத்தக்கதாகும். இவ்வளவு நல்ல முறையில் தயாரிக்கப்பட்ட திட்டத்திலும் ஒரு சில குறைகள் சொல்லப்படுகின்றன.

[Sri V. Muthu] [4th March 1955

முக்கியமாக வரி வதிப்பைப் பற்றி எல்லோரும் சில ஆட்சேபணைகள் சொல்லத் தான் முடியும். அதாவது, குறிப்பாக விவசாயிகள் மீது மேலும் மேலும் வரி போடுவதைத் தான் எல்லோரும் குறையாகச் சொல்லுவார்கள். இருந்தாலும் துண்டு விழும் தொகையைச் சரிக்கட்டுவதற்காக இவ்வரி விதிக்கப்படுகிறது என்று கூறப்படுகிறது. இது பற்றி நிதி மந்திரி அவர்கள் விளக்கமாக கூறியிருக்கிறார்கள். அதையெல்லாம் நாம் பார்க்கும்போது இந்த வரியானது காரணத்தோடுதான் போடப்படுகிறது என்பதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும்.

"முக்கியமாக இந்த ஆண்டில் பல நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு பணம் ஒதுக்கி இருக்கிறார்கள். நமது மாகாணத்தில் பெரிய நீர்ப்பாசனங்கள் இனி எதுவும் எடுத்துக் கொள்ளுவதற்கு இல்லை என்று மந்திரி அவர்கள் கூறினார்கள். நமக்கும் தெரிகிறது. ஆனால் இனிமேல் ஆரம்பித்து பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களை முடிப்பது என்றால் நான்கு வருஷங்களுக்கு மேல் ஆகும். ஆகவே உடனடியாக பலனளிப்பதற்கு, சிறு சிறு நீர்ப்பாசனத் திட்டங்களை கையாளத்தான் வேண்டும். சில ஆண்டுகளுக்கு முன்பு வருஷ நாட்டிலே அதாவது பெரும்பகுதி மழை வருஷித்துக் கொண்டிருக்கும் நாட்டிலே வள்ள நதி உற்பத்தியாகி வைகை வழியாகச்சென்று, வேறு இடத்திற்கு பிரயோஜனப்படுகிறது. துப்பரவு என்னுமிடத்தில் ஜமீன்தாரி காலத்திலே வள்ள நதியைத் தடுத்து ஒரு அணை கட்டியிருக்கிறார்கள். அது பின்னால் பழுதடைந்து உடைந்து போய் விட்டது. ஆகவே அந்த இடத்தில் ஒரு அணையை கட்டினால் அங்குள்ள மக்களுக்கு ஒரு காலத்திலே வெள்ளம் பெருகுவதைத் தடுத்து தேக்கிவைத்துக் கொள்ள முடியும். அவ்வாறு தேக்கிவைத்துக் கொள்ளுவதால் அந்தப் பிரதேசத்திலுள்ளவர்களுக்கும், அண்டைப் பிரதேசங்களிலே உள்ளவர்களுக்கும் அதன் மூலமாக கிணறுகளில் தண்ணீர் ஊற்று உண்டாகும். விவசாயிகள் ஓரளவு நல்ல விளைச்சல் செய்ய முடியும். அதையெல்லாம் அரசாங்கத்தார் கவனிக்கவேண்டும்.

"அடுத்தபடியாக, பெரியகுளம் தாலூக்கா என்னும் பிரதேசம் பல வசதிகளோடு கூடி இருந்தாலும், இன்னும் அதிகப் பயன்படக்கூடிய முறைகள் ஒன்றையும் செய்யவில்லை. கனம் நிதி மந்திரி அவர்கள் அப்பிரதேசத்தில் கல்லாறு என்ற நதியைப் பார்த்திருக்கிறார்கள். அங்கு ஒரு அணைக்கட்டுத் திட்டத்தையும் ஏற்படுத்த வேண்டுமென்று அப்பிரதேசத்து மக்களை கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அது எப்படியிருக்கிறது என்று தெரியவில்லை.

"பண்ணையாறு என்று சொல்லலாம். அதில் தண்ணீர் உற்பத்தியாகி, திருவாங்கூர் ராஜ்ஜியத்தில் போய் விழுகிறது. அதிலும் தண்ணீர் வீணாகிறது. ஒரு காலத்தில் பெரியாற்றைப் போல் அணைகட்டி, பிரயோஜனப் படுத்தலாம். ஆனால் இப்போது திருவாங்கூர் சர்க்கார் அங்கே ஒரு அணைகட்டி, மின்சார அபிவிருத்திக்கானவற்றை செய்திருக்கிறார்கள். அப்படி அவர்கள் மின்சாரம் அபிவிருத்தி அளவிலே உபயோகப்படுத்திக் கொள்வதால் பரவாயில்லை. அந்த அரசாங்கத்தோடு நம்முடைய அரசாங்கத்தார் பேச்சு வார்த்தைகள் நடத்தி ஷ தண்ணீரை நம் நட்டிற்கு பாசன வசதி செய்து கொள்ளவேண்டுமென்று கேட்கிறேன்.

"ஹரிஜனங்கள் ஒவ்வொரு தடவையும் குறை சொல்வது வழக்கம். எங்களுக்கு ஒரு கோடி வேண்டும் என்று கேட்பார்கள். ஆனால் இந்த ஆண்டு அவ்வாறு குறை சொல்ல முடியாது. சுவாமி சகஜானந்தா அவர்கள் கூறியது போல் மேலும் அடுத்த ஆண்டு அதிகமாக ஒதுக்குவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். இந்தப் பணத்தைச் செலவழிப்பதில் என்னுடைய சிறிய யோசனையையும் சொல்லுகிறேன். ஹரிஜன நிதியிலிருந்து செலவழித்து ஹரிஜனங்களுக்காகவென்று தனியாக லேபர் ஸ்கூல் நடத்தப்பட்டு வருகின்றன. இதில் பகல் உணவு, பள்ளிக்கூட கட்டிட வாடகை, ஆசிரியர் சம்பளம், மற்றும் நிர்வாகச் செலவும் செய்யப்படுகிறது. ஹரிஜனங்கள் உட்பட எல்லோருடைய கல்விக்காக சர்க்காரில் நிதி

4th March 1955] [Sri V. Muthu]

ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த நிதியிலிருந்து நடத்தப்படும் பொதுப் பள்ளிகளில் ஹரிஜனக் குழந்தைகளைப் படிக்க விட்டு விட்டு அவர்களுக்கு பகல் உணவு மட்டிலும் கொடுத்து வரலாம். 3 மைல் சுற்றளவிலுள்ள பள்ளிகளில் படிக்கும் ஹரிஜனப் பிள்ளைகளுக்கு ஒரு மத்தியமான இடத்தில் பகல் உணவு கொடுக்க ஏற்பாடு செய்யலாம். அப்போது தனியாகப் பள்ளிக்கூடம் நடத்தும் செலவு குறையும். அந்த மிச்சப் பணத்தைக் கொண்டு இன்னும் அதிகமான பிள்ளைகளுக்கு பகல் உணவு கொடுத்துப் படிக்க வைக்கலாம். மற்றும் பல அபிவிருத்தி வேலைகளையும் செய்யலாம்.

"இந்த லேபர் ஸ்கூலை வைத்துக்கொண்டு வீணாக நாம் நிறையச் செலவு செய்கிறோம் என்பதே என்னுடைய அபிப்பிராயம். 11-40 a.m.

"அதோடு ஹரிஜனங்களுக்கு கல்வி போன்ற விஷயங்களில் பணம் செலவிடுவதைப் போலவே மிகவும் முக்கியமானது அவர்களுக்கு நிலங்களை ஜாரி செய்து கொடுப்பது. மனைக் கட்டுகள் விஷயம் பைசல் செய்யப் படாமலிருக்கின்றன. நிலம் ஜாரி செய்து கொடுப்பதில் ஏகப்பட்ட கால தாமதம் செய்கிறார்கள். பெரியகுளம் தாலூக்கா, கோடைக்கானல் போன்ற இடங்களில் ஹரிஜனங்கள் ரொம்ப சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பயிரிட்டு வந்தவர்கள் நிலத்திலிருந்து வெளியேற்றப் பட்டிருக்கிறார்கள். இதையெல்லாம் சர்க்கார் உடனடியாகக் கவனிக்கவேண்டும்.

"அடுத்தபடியாக நமது சபையின் முழு கவனத்தையும் கவர்ந்திருப்பது கல்வி விஷயமாகும். கனம் மந்திரி அவர்கள் சொன்னமாதிரி 500 பேர்கள் உள்ள கிராமங்களுக்கு எல்லாம் ஒரு பாடசாலை ஏற்படுத்த திட்டம் போட்டிருக்கிறோம். அதோடு கிராமந்திரங்களில் **Higher Elementary School**-கள் இருக்கின்றன. இதில் 3-வது பாரம் என்பது கிடையாது. எட்டாம் வகுப்பு வரை தான் இருக்கிறது. இப்படி ஏன் இருக்கிறதென்றால் இதில் படிப்பவர்களுக்கு சம்பளம் கிடையாது. ஆனால் III-ம் பாரம் வரை ஹைஸ்கூல் அல்லது மிடில் ஸ்கூலில் படித்தால் சம்பளம் உண்டு. ஆகவே இப்படி வைக்கப்படுள்ளதாகச் சொன்னார்கள். நாம் இவ்வாண்டு முதல் எல்லா ஏழை மாணவர்களுக்கும் III-பாரம் வரையில் இலவசக் கல்வி அளிக்க முடிவு செய்து விட்டதால் இப்பொழுதுள்ள **Higher Elementary School** களையே எடுத்து விட்டு, எல்லா வற்றையும் மிடில் ஸ்கூலாக்கி விடலாமென்று யோசனை கூற விரும்புகிறேன். ஏனென்றால் இன்றைக்கு ஒரு மாணவன் **Higher Elementary School**-ல் எட்டாம் வகுப்பு பாஸ் செய்து விட்டு **High School**-க்குச் சென்றால் சில இடங்களில் அவனை IV பாரத்தில் சேர்த்துக் கொள்வதில்லை. மறுபடியும் III பாரம் படிக்கவேண்டுமென்கிறார்கள். காரணம் தகுதியில்லையென்கிறார்கள். நாம் எப்போது III பாரம் வரையில் ஏழை மாணவர்கள் எல்லோருக்கும் இலவசக் கல்வி அளிப்பதாக முடிவு செய்து விட்டோமோ அப்பொழுது எல்லாவிடங்களுக்கும் 'மிடில் ஸ்கூலையே' ஏற்படுத்துவது ரொம்பவும் நல்லதென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அப்பொழுது தான் இந்தத் திட்டத்தினால் எல்லா மாணவர்களுக்கும் பயன் ஏற்படும். மேலும் கல்வியபிவிருத்திக்காக அரும்பாடுபடும் சர்க்கார் கல்வியின் தரத்தையும் கவனித்துக்கொள்ள வேண்டும். தற்காலம் படித்தவர்களுள் தரமும் ஒழுக்கப் பண்பும் குறைவாய் காணப்படுகிறது என்று நான் சொல்லத் தேவையில்லை. பெரிய பெரிய தலைவர்களும் மந்திரிகளும்கூட தற்காலம் படித்தவர்களில் தரமும் ஒழுக்கமும் குறைவுதான் என்று சொல்லி வருகிறார்கள். சமீபத்தில் 'படித்த முட்டாள்' என்றொரு சினிமாப் படம் கூடத் தயாராகிக் கொண்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். நம் நாட்டு மக்களுக்கு இப்படிப்பட்ட முட்டாள் பட்டம் ஏற்படுவது நம் நாட்டிற்கே அவமானம். இதையெல்லாம் கவனித்துக்கொள்ள வேணுமாய் கனம் கல்வி மந்திரியவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்."

***Sri N. RATHINA GOUNDER** :—"கனம் உதவி சபாநாயகர் அவர்களே சபை முன்பு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற வரவு செலவு திட்டத்தில் மூன்றாம் பாரம் வரை, சாதி, சமய, இனப் பாகுபாடு இன்றி எல்லா 11-46 a.m.

[Sri N. Rathina Gounder] [4th March 1955

மாணவர்களுக்கும் இலவசக் கல்வி அளிக்க ஏற்பாடு செய்திருப்பது மகிழ்ச்சிக் குரியதாகும். அதற்காக மதிப்பிற்குரிய நிதி மந்திரி அவர்களுக்கு நன்றி செலுத்துகிறேன். அவர், அதோடு திருப்தியடையாமல் S.S.L.C. வரைக்கும் இலவசக் கல்வி அளிக்க ஏற்பாடு செய்து விட்டாரானுல் அது அவருக்கு மாத்திரம் பெருமை தராது, அவரது மந்திரி சபைக்கு மாத்திரம் பெருமை தராது. சட்ட சபையிலுள்ள எல்லா அங்கத்தினர்களுக்குமே பெருமை அளிக்கும். ஆகவே அதையும் அடுத்த பட்ஜெட்டில் செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

"அடுத்த படியாக கனம் நிதி மந்திரி அவர்கள் தன்னுடைய பிரசங்கத்தை தமிழிலும் கொடுத்திருக்கிறார்கள். அது தமிழ் ஆட்சி மொழியாக ஏற்படும் என்பதற்கு அறிகுறி. மேலும் திராவிட நாடு பெறவும் நம்பிக்கை ஏற்படுகிறது. அடுத்தபடியாக இன்றைய தினம், ஜாதிச் சண்டை, சமூகச் சண்டை ஆகியவை நாட்டில் பெருகி விட்டது. இவற்றை சட்ட பூர்வமாக ஒழிக்க வேண்டும். என்னைக் கேட்டால் பணக்கார சமூகம், ஏழை சமூகம் என்று இரண்டே பிரிவுகள் அடிப்படையில் நாம் எந்தக் காரியத்தையும் செய்ய வேண்டுமே தவிர, ஜாதிச் சண்டைக்கு இடமேயளிக்கக் கூடாது.

"நாங்கள் காடாரம்பப் பிரதேசத்தில் வசித்துக் கொண்டிருக்கிறோம். மழையே யில்லாததால் உழுது உழுது, வெள்ளாமை எடுக்காமல் அலுத்துப் போய்க் கொண்டிருக்கிறோம். எங்களுக்கும் வரி அதிகம் போட்டால் நாங்கள் எப்படிக் கட்டுவது என்பதை சிந்திக்க வேண்டுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

"அரசாங்கம் ஏழை பணக்காரர் என்ற அடிப்படையில் எந்த சலுகையும் செய்ய வேண்டும். தவிர வன்னியகுல க்ஷத்திரியருக்காக செய்யும் எல்லா சலுகைகளும் கொங்கு வேளாளருக்கும் கொடுக்கவேண்டும்."

**Sri K. R. VISWANATHAN** :—"கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நண்பர் பேசும் போது வன்னியகுலக்ஷத்திரியருக்காகத் தனிச் சலுகை அரசாங்கம் காட்டுவதாகப் பேசினர். அது சரியல்ல. வன்னியகுலக்ஷத்திரியருக்கு அரசாங்கம் கல்விச் சலுகை அளித்திருப்பது எல்லோருக்கும் தெரியும். குற்ற பரம்பரையைச் சார்ந்தவர்கள் என்பதற்காகவே அந்தச் சலுகை அளிக்கப்பட்டிருப்பதாக சர்க்கார் அதனை விளக்கியிருக்கிறார்கள். ஆகவே எதுவும் எங்களுக்குத் தனி சலுகை அளிப்பதாக கனம் அங்கத்தினர் சொல்ல வேண்டாம்."

**DEPUTY SPEAKER** :—"The Hon. Member wants that his community also should be included in the list of Backward classes."

11-50 p.m. ***Sri N. RATHINA GOUNDER** :—"நான் அதைப்பற்றி சொல்லவில்லை. காடாரம்பப் பிரதேசத்திலிருந்து வந்துள்ள, கல்வியில் பிற்போக்குள்ள எங்களுக்கும் தனிச் சலுகை அளிக்கப்பட வேண்டுமென்பதே என் கோரிக்கை, பொருளாதாரத்தில் நாங்கள் மிகவும் பிற்போக்காக இருக்கிறோம்.

"நீண்ட காலமாக சக்கிலியர் ஜாதி புறக்கணிக்கப்பட்டு மிகவும் தாழ்த்தப்பட்டவர்களில் தாழ்த்தப்பட்ட சமூகமாக இருக்கிறது. இவர்கள் மிகவும் சீர்கேடான நிலைமையில் இருக்கிறார்கள். இவர்களுக்கு தாழ்த்தப்பட்டவர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் தவறாமல் அளிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"கரூரைச் சுற்றி 25 மைல் சுற்றளவில் 11 ஹை ஸ்கூல்கள் இருக்கின்றன. கரூரில் ஒரு கலைக் கல்லூரி ஏற்படுத்துவதற்காக விவசாய மாநாட்டின் மூலமாகவும், நகர சபை மூலமாகவும் தனிப்பட்ட ஸ்தாபனங்கள் மூலமும் தீர்மானம் நிறை வேற்றி கவர்ன்மெண்டாருக்கு அனுப்பியும்

நாளை வரையில் அரசாங்கம் செவி சாய்க்கவில்லை. கரூர் தாலூகா பூரா வும் நீர்பாசனத்திற்கு மின்சார வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அங்கு ஆழமான கிணறுகள் வெட்டி ஏழை விவசாயிகள் நீர் பாய்ச்ச கஷ்டப்படுவதால் ஆழக் கிணறுகளிலிருந்து சுலபமாகவும், சிக்கனமாகவும் தண்ணீர் இறைக்க விவசாயிகளுக்கு ஒத் தாசை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

" கரூர் தாலூக்கா அரவக்குறிச்சி பிர்க்காவில் பெத்தாச்சி நகரம் என்னும் நல்லாக்கவுண்டன்பட்டிக்கு அருகில் குடகளாறு என்னும் நதி ஓடுகிறது. அது சுமார் 30 மைல் தூரம் நீர்ப்பாசனமின்றி ஓடிக்கொண்டிருக்கிறது. இந்த நதி நல்லாக்கவுண்டன்பட்டி அருகே பெரும்பாரை என்னும் இடத்தில் மிகவும் குறுகலாக இருக்கிறது. இந்த நதியின் இருபக்கங்களிலும் பாறைகள் உள்ளன. ஆற்றின் அடித் தளத்திலும் பாறை இருக்கிறது. ஆற்றின் அகலம் 150 அடிதான். இந்த இடத்தில் மிகவும் சுலபமாக அணைக்கட்டி நீர் தேக்கலாம். இது சம்பந்தமான ஆராய்ச்சி நீண்ட நாட்களாக நடந்து வருகிறது. இத் திட்டத்திற்கு சர்க்கார் உடனடியான நடவடிக்கை எடுத்து இதை நிறை வேற்றி வைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இதனால் அரவக்குறிச்சி பிர்க்காவும் வெள்ளியணை பிர்க்காவும் பாய ஏது இருக்கிறது. லோயர் பவானியால் மூன்று கிராமத்திற்கு நீர்ப்பாசன உதவி ஏற்படுகிறது. அதை பரமத்தி, சின்னத்தாராபுரம் பிர்க்காக் களுக்கு பாய்ச்ச வசதி செய்ய வேண்டும். நீர்ப்பாசன வசதி செய்து கொடுத்தால் கட்டளை முதலிய வாய்க்காலை இன்னும் வெட்டி புகளூர் பிர்க்கா விவசாயிகளுக்கு பெரும் நன்மை ஏற்படும்.

" இன்னொரு முக்கியமான விஷயம் தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன். வைத்தியத்திற்குள் இப்பொழுது ஹோமியோபதி மருந்துகள் தலை சிறந்த மருந்தாக விளங்குகிறது. குழந்தைகளுக்கும் மிக பயன்படக் கூடியதாகயிருக்கிறது. விலையும் அதிகமாக இல்லாது மிகக் குறைந்த விலையிலும் விற்கப்படுகிறது. ஆதலால் ஓமியோபதி முறையை ஆதரித்து இதை ஆஸ்பத்திரிகளில் உபயோகப்படுத்துவதற்கு அனுகூலம் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

" குளித்தலை தாலுக்கா தலை நகரமாகிய குளித்தலையில் உள்ள லோக் கல் பண்டு ஆஸ்பத்திரியை அரசாங்க ஆஸ்பத்திரியாக மாற்றி அமைக்க வேண்டும். ஏனென்றால் திருச்சிக்கும் கரூருக்கும் இடையில் உள்ள தூரம் 45 மைல். இந்த இட வெளியில் கவர்ன்மெண்டு ஆஸ்பத்திரி எதுவும் கிடையாது. 1952-ம் வருஷத்தில் 259 நோயாளிகள் வந்திருக் கின்றனர். 1952-ல் ஜில்லா போர்டில் இருந்து கொடுக்கப்பட்ட பணம் சுமார் ரூ. 4,000. 1954-55-ல் தினம் வரும் சராசரி நோயாளி 400. ஆனால் கொடுக்கப்பட்டிருக்கும் பணம் சுமார் 1,090 ரூபாய். ஆகையால் மக்களுக்கு வேண்டிய மருந்து வழங்க டிஸ்டிரிக் போர்டுக்கு போதிய பண வசதி இல்லாத காரணத்தினால் குளித்தலை லோகல் பண்டு ஆஸ் பத்திரியை கவர்ன்மெண்டு ஆஸ்பத்திரியாக மாற்றியமைக்க வேண்டும். இதுபோலவே அதிக தொகை செலவழித்து கட்டிடம் கட்டியுள்ள பள்ள பட்டி ஆஸ்பத்திரியையும் கவர்ன்மெண்டு ஆஸ்பத்திரியாக்க வேண்டும்.

" திருச்சி ஜில்லாவை எடுத்துக் கொண்டால் திருச்சி நகரிலேயே மூன்று சப்-கோர்ட்டுகள் இருக்கின்றன. 10 தாலூக்காக்களை கொண்ட திருச்சி ஜில்லா மக்களெல்லாம் இந்த மூன்று கோர்டுகளுக்கு வரவேண்டியிருக்கிறது. அதனால் அவர்களுக்கு பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஆதலால் தலை நகரத்தில் இருக்கும்படியான சப்-கோர்ட்டுகளை மூன்று தனித்தனியான இடங்களுக்கு மாற்றிவிட்டால் அந்தந்த பகுதியிலுள்ள மக்களுக்கு உதவி யாயிருக்கும். ஒரு சப்-கோர்ட்டை கரூருக்கு மாற்ற வேண்டு மென்ற ஏற்பாட்டை செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்ளுகிறேன். காரணம் என்னவென்றால் கரூருக்கு 30 மைலுக்கு அப்பாலுள்ள மக்கள் திருச்சிக் குப் போகவேண்டு மென்றால் 75 மைல் தூரம் போகவேண்டியிருக்கிறது அதற்குப் பணச் சிலவும் காலதாமதமும் ஏற்படுகிறது. ஆத

லால் இதை அரசாங்கம் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். கரூர் தாலூகா அரவக்குறிச்சி பிர்க்கா ரங்கமலையை அடுத்து அடிக்கடி நில நடுக்கம் ஏற்படுகிறது. இதை கவர்ன்மெண்டார் கவனித்து ஆவன செய்யவேண்டும்.

" இன்னொரு முக்கியமான விஷயம் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த மந்திரி சபையில் ஒரு முஸ்லீம் மந்திரி இல்லாதது பெரும் குறையே. நம் நாட்டிலிருக்கும் முஸ்லீம்களும் இந்துக்களும் சகோதரர்கள் போன்று வாழ்கிறார்கள். நம் சென்னை மந்திரி சபையில் இனிமேல் ஒரு மந்திரி அதிகரித்தால் அது முஸ்லீமாகவிருந்தால் நலமாக இருக்கும் என்பது என் போன்றவர்கள் கோரிக்கை."

* SRI S. C. VIRUPAKSHIAH :—" Mr. Deputy Speaker, Sir, I have great pleasure in welcoming the proposals contained in the budget. Even a casual observer cannot help remarking that this budget is the outcome of deep deliberation and considerable thought. The Hon. Finance Minister richly deserves congratulations on the proposals he has placed before us. Many of the laudable principles laid down in our Constitution have been fully borne in mind in preparing the proposals. I wish to refer to some of them. An outstanding feature of this budget is the exemption from the payment of school fees up to Form III of all children the income of whose parents is less than Rs. 1,200 per annum. This is a most redeeming feature. Then, there is liberalisation of leave rules for Government servants and the provision of increased allotment for ameliorative measures for the Scheduled and Backward Classes. These are things which should certainly be welcomed. These are the cherished ideals
12 noon of a Welfare State.

" Another redeeming feature in the present budget is that it departs from its old procedure of conferring benefits on the urban people in preference to the rural people. Now, we find greater allotments for rural communications, for opening of schools in every village which has got a population of 500 and more and for sinking of drinking water wells. All these things tend towards the attainment of the goal of a Welfare State. Further, the ideal evolved at the Avadi Congress Session, namely, the establishment of a socialistic pattern of society, is certainly borne in mind. What other things can we expect immediately after the declaration of the goal as the establishment of a socialistic pattern of society? We find here concrete instances of things which will tend us towards the attainment of this goal.

" Now, I wish to say a few words about irrigation projects. Certainly, the Government have come to realise that we have no more big schemes to execute and that we must try to execute hereafter medium-sized and small schemes. This deserves praise from all hon. Members. There are certain limitations with respect to large-scale projects. The benefits of large-scale projects are limited to certain localities only. But medium-sized and small schemes can be spread over the whole State and their benefits derived by the

4th March 1955] [Sri S. C. Virupakshiah]

people all over the State. Sporadic attempts to improve some localities only should be shunned. Uniform improvement throughout the State should be preferred. On this score, the Government deserve to be commended.

" Then, a good sum is allotted for electrification. The sum allotted is by far the largest in all these years. Irrigation and electricity are the twin amenities that an agriculturist needs if his economic status is to be improved. Certainly, the Government deserve praise for their act. But I wish to tell the Government that certain liberalisation is required with respect to guarantees and yield or percentage that is required from all these undertakings. It ill-fits with the present ideal of establishment of a Welfare State. No doubt, on one occasion, the Hon. the Minister for Public Works advanced the argument that since we borrowed, a certain percentage should be thought of. To say that borrowed money is used for providing amenities to the people is an antiquated idea. In this connection, I want to make pointed reference to another thing. It is unfortunate that the present Government expect the same percentage with reference to forward and backward areas. The condition of backward areas is the result of long neglect and as such, such areas deserve special consideration at the hands of the present Government. If really the Government think that the percentage should be uniform throughout the State, it is necessary that they should create a special fund to improve these backward areas. Then only they can expect a uniform return throughout the State.

" I am glad to hear from the Hon. the Minister for Agriculture that in regard to National Extension Service, he will not adhere to the old principle of selecting only contiguous areas for improvement, and that the selection will be made mainly taking the backwardness of the area into consideration.

" With regard to the Village Panchayats Act, a word has got to be mentioned. If the Government realise that village panchayats are the real fundamental units, more village panchayats have got to be constituted. Otherwise, some other remedy has got to be thought of. Either it must be enforced in full or not at all enforced.

" On a number of occasions I have brought to the notice of this House several grievances of the people of my constituency but with no success. At least this time, I request the Government to look to our needs. The main difficulty is that Kollegal is far away from the district headquarters. I suggest that it may be constituted into a separate revenue division with a Revenue Divisional Officer for the area. He must be an officer not only to collect the dues of the Government but to see to the development of the area. He must be a liaison officer co-ordinating the activities of the various departments working towards the establishment of a Welfare State. Kollegal is in Coimbatore district, but to coin a phrase, it is the Rayalaseema of Coimbatore district. Nature has endowed it with various jungle streams. But none of them has been harnessed properly. For instance, there is a scheme called the Honnahalla Scheme. It was about to fructify. But, for want of staff, it was

[Sri S. C. Virupakshiah] [4th March 1955

withheld. Obstacles have been placed and it is still in the stage of investigation only. I request that this Government may expedite the investigation of the scheme and execute it. If it fructifies, it will irrigate about 1,500 acres of land. Whatever may be the yield therefrom, it deserves some special consideration.

"There is a channel by name Gundal. It will supply water to a number of irrigation tanks. There are only about a dozen irrigation tanks and as many as nine will be benefited by it. As such, Gundal Reservoir and channel deserves special consideration. A scheme should be formulated for this purpose also.

"Much has been said about restoration of minor tanks. To my surprise, I find that none of the tanks in my area has been repaired or restored for the past many decades. The reason for such neglect is that the Subdivisional Officer of the Public Works Department is having his office somewhere in North Arcot and the Executive Engineer is somewhere in Salem district. So, the work is delayed. Some intensive and special effort on the part of the Public Works Department is necessary to execute all these works.

"The position in regard to rural communications is very bad. Even the road that connects the district headquarters with the taluk headquarters is cut by a number of jungle streams. All such streams remain unbridged. Some steps must be taken to bridge up all these streams and to improve highways.

"Then, there are some village roads. Their condition is far from satisfactory. Some forest roads are used to move from place to place. I wish that some more attention should be paid to improvement of rural communications.

"I wish to make a passing reference to the question of dispensaries. The number of dispensaries is hardly sufficient to meet the needs of the people. Provision of a mobile medical unit can be thought of in this connection.

"Then, there is much cattle wealth in this area. The present veterinary dispensary is not able to meet the needs. I wish that one more dispensary may be located at Hanur. On another occasion, when I put a question, the Government were pleased to answer that the starting of an Insemination Centre was under their active consideration. But that scheme has not yet materialised. I hope it will materialize soon.

"With respect to forests, there must be a plan for their improvement. We should aim at afforestation. Our area abounds in forest wealth and it is but proper that the Government must bestow more attention on that. There are certain difficulties and delay in the transport of timber from the forests on account of the Timber Transport Rules. All these should be looked into and the necessary assistance given to the people."

12-10 p.m. * SRI T. S. ARDHANARI :—" கனம் உதவி சபா நாயகர் அவர்களே, வருஷா வருஷம் வரவு செலவுத் திட்டப் பிரசங்கத்திலே கைத்தறி சம்பந்தமாக குறிப்பிட்டுக் கொண்டு வந்தார்கள். இந்த

4th March 1955] [Sri T. S. Ardhanari]

வருஷ வரவு செலவுக் கணக்கை பார்க்கும் போது கைத்தறியைப் பற்றி ஒரு வார்த்தைக்கூட சொல்லமல் விடப்பட்டிருக்கிறது என்பதை வருத்தத்தோடு தரிவித்துக்கொள்ளுகிறேன். கைத்தறிப் பிரச்சனை தீர்ந்து விட்டது என்று இந்த மாகாணத்திலே மக்களிடையே ஒரு எண்ணம் உண்டாக வேண்டும் என்ற எண்ணத்தோடு வேண்டு மென்றே விடப் பட்டிருக்கிறது என்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது. 16-ம் தேதி தொழில் மந்திரி அவர்கள் செஸ் பண்ட சம்பந்தமாக ஒரு அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள். 16-ஆம் தேதி அறிக்கை கொடுத்து விட்டு, பட்ஜெட் வருகிற நேரத்திலே சட்ட சபை அங்கத்தினர்கள் கவனத்தை திருப்பி விட்டு சோதிப்பது போல்தான் இந்த பட்ஜெட் அமைந்திருக்கிறது என்று பொதுவாகக் கருதுகிறேன். 16-ஆம் தேதி தொழில் மந்திரி அவர்கள் வெளியிட்ட அறிக்கையை நான் படித்துப் பார்த்தேன். அவருடைய அறிக்கையிலே இருக்கக்கூடிய விஷயங்கள் 100-க்கு 90 பங்கு உண்மையல்ல என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். மந்திரியார் அவர்கள் ஒரு வேளை அவருடைய டிபார்ட்மெண்டால் ஏமாற்றப் பட்டிருக்கலாம் என்று நான் நினைக்கிறேன். இந்த செஸ் பண்ட் சம்பந்தமாக 2 வருஷகாலமாக நம்முடைய மாகாணத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் 216 லட்சம். அதில் மத்திய சர்க்காரால் அனுமதிக்கப்பட்டது 159 லட்சம். இதில் மாகாண சர்க்கார் அனுமதித்துள்ளது 121 லட்சம். 1955-ஆம் வருஷம் ஜனவரி மாதம் முடிய செலவிடப்பட்டது 43 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய். ஆகவே நான்கில் ஒரு பங்கு தொகை செலவழிக்கப்பட்டு இருக்கிறது. இந்த 43 லட்ச ரூபாய் செலவிடப்பட்டிருப்பதை பற்றி அந்த அறிக்கையில் மந்திரி அவர்கள் விளக்கியிருந்தார்கள். அதாவது புதியதாக 28,205 தறிகள் சேர்க்கப் பட்டிருப்பதாகவும், 212 சொசைடிகள் ஆரம்பிக்கப் பட்டிருப்பதாகவும் 49 விற்பனை டிப்போக்கள் அதிகப்படுத்தியிருப்பதாகவும், உற்பத்தி மதிப்பு 18 லட்சத்திலிருந்து 32 லட்சமாக அதிகரித்திருப்பதாகவும், விற்பனை ஆன துணி மாதம் ஒன்றுக்கு 21 ஆயிரத்திலிருந்து 27 ஆயிரமாகவும் அதிகரித்திருப்பதாக கணக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்தக் கணக்குகள் உண்மையானவையா என்று நாம் பார்க்க வேண்டும். ரிபேட் கொடுக்க சொசைடிகளுக்கு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதை முதலில் நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். பொதுவாக இந்தப்பணம் பொது மக்களுக்குக் கிடைக்காமல் எவ்வாறு சர்க்கார் ஏமாற்றப்படுகிறது என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். குறிப்பாக ஒரு சொசைடியை எடுத்துக் கொள்வோம். இந்த சொசைடியிலே சுமார் 20 ஆயிரம் கஜம் துணி நெய்யப்படுகிறது என்று வைத்துக்கொள்வோம், அந்த சொசைடி பிரசிடெண்ட் என்ன செய்வார் என்றால், அந்த 20 ஆயிரம் கஜம் துணியை ரீடையிலில் அதாவது சில்லரையில் ரூபாயிக்கு 1½ அணு குறைத்து விற்றுவிட்டதாக கணக்கு எழுதி விட்டு, மொத்த வியாபாரிக்கு அதை விற்று விடுவார். ஆகவே அதைச் சில்லரைக்கு விற்ற விலை என்பது நன்கு புலனாகும். மொத்த வியாபாரி சொசைட்டியில் இருந்து ஜவுளி வாங்கியதாக கணக்கு எழுத மாட்டார். சில்லரையில் தறிக்காரர்களிடம் இருந்து மார்க்கட் ரேட்டிற்கு ஜவுளி வாங்கியதாக கணக்கு எழுதுவார். இதன் விளைவு என்ன? சொசைடிகள் கணக்கில் 20 ஆயிரம் கஜம் துணி உற்பத்தி. மொத்த வியாபாரிகள் கணக்கில் 20 ஆயிரம் கஜம் துணி உற்பத்தி. இரண்டும் சேர்ந்தால் 40 ஆயிரம் கஜம் துணி உற்பத்தி. ஆனால் உண்மையில் உற்பத்தி ஆனது 20 ஆயிரம் கஜம்தான் எனவே கணக்கில் இரண்டு பங்கு உற்பத்தியாக இருக்கிறது.

" அடுத்து, மொத்த வியாபாரி சில்லரை வியாபாரிக்கு விற்கிறான். சில்லரை வியாபாரி என்ன செய்கிறான் என்பதைப் பார்ப்போம். ஒரு சேலையை 7½ ரூபாய்க்கு விற்க வேண்டு மென்றால் அதை 8 ரூபாய் என்று சீட்டு எழுதி ஒட்டி விட்டு, ரூபாய்க்கு ஒரு அணு தள்ளிக் கொடுப்பதாக விற்கிறான். மக்களும் ஏமார்ந்து வாங்கி விடுகிறார்கள். இப்படி இரண்டு கை மாறி விற்பதானால் அதிலே ரிபேட் ரூபாய்க்கு 2½ அணு லாபத்தை மூன்று பேர்கள் பங்கு போட்டுக் கொள்ளுகிறார்கள். இந்த 2½ அணு ரிபேட்டை 1 அணு சொசைடியும், ½ அணு மொத்த வியாபாரியும்,

[Sri T. S. Ardhanari] [4th March 1955

மீதியுள்ள 1 அணவை சில்லரை வியாபாரியுமாக பங்கு போட்டுக்கொள்ளு கிறார்கள். இதையெல்லாம் சர்க்கார் உணர வேண்டும். இது ஒரு முறை. இவ்வாறு இன்னும் பல முறைகள் கையாளப்படுகின்றன.

" இன்னும் ஒரு முறையைச் சொல்லுகிறேன். சில சொஸைடிகளில் உற்பத்தியே நடைபெறுவது கிடையாது. நாலு பேல் நூலை வாங்கு வார்கள். நாலு பேல் நூலையும் தறிக்கு கொடுத்ததாக கணக்கு எழுது வார்கள். பின்னர் அவர்களிடமே பீஸாக வாங்கியதாக கணக்கு எழுது வார்கள். அதையெல்லாம் சில்லரையில் ரூபாய்க்கு 1½ அணு குறைத்து விற்பதாகவும் எழுதுவார்கள். இந்த 1½ அணவை சர்க்காரிடம் வாங்கி விடுவார்கள். ஆனால் உண்மையில் உற்பத்தியோ, விற்பனையோ இருக்காது. அந்த சொஸைடியே வேலை செய்யாது. இம்மாதிரியான முறைகளை சிலர் கையாண்டு ரிபேட்டைப் பெற்று வருகிறார்கள். ஆகவே உற்பத்தியில்லாத ஒரு சொஸைடி என்ன மாதிரியான முறைகளையெல்லாம் கையாண்டு சர்க்காரை ஏமாற்றுகிறது என்பதை சர்க்கார் கவனிக்க வேண்டும். இவ் வாறு பொய்யான கணக்கையெல்லாம் சேர்த்துதான் உற்பத்தி அதி கரித்து விட்டதாக சர்க்காரால் புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. ஆகவேதான் இதை நான் 90 சத விகிதம் பொய்யானது என்று சொன் னேன். இதே முறையைத்தான் சில்லரை வியாபாரிகள் இன்னும் கடைப்பிடித்துக் கொண்டு வருகிறார்கள். இப்படி பங்கு போட்டுக் கொள்வதால் என்ன விளையும் என்பதை பார்ப்போம். உண்மையில் உற்பத்தியாகா விட்டாலும், வருஷா வருஷம் உற்பத்தி அதிகரித்துக் கொண்டே வருவதாகவும், நெசவாளர்களுக்கு வேலையில்லா திண்டாட்டம் தீர்ந்து விட்டதாகவும் அதிகமாக உற்பத்தியாகும் ஜவுளி பூராவும் விற்பனை யாகி விட்டதாகவும் ஆகவே பொது மக்கள் வாங்கும் சக்தி உள்ளவர்களாக மாறி விட்டார்கள் என்பது போல் ஒரு தோற்றம்தான். இத்தகைய தவறு இன்று நடைபெற்று வருகிறது என்பதை சர்க்காருக்கு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

" செஸ்-பண்டில் உள்ள விஷயப்படிப் பார்த்தால் புதிய தறிகள் உற் பத்தியாகிக் கொண்டு வருவதாகத் தெரியும். ஆனால் உண்மையில் இன்று புதுத் தறிகள் உண்டாவதே கிடையாது. உதாரணமாக, ஒரு சொஸைடி யிலே முன்பு 150 தறிகள் வேலை செய்து கொண்டிருந்தால், இன்றை க்கு 100 தறிகள்கூட இயங்குவது கிடையாது என்பதை சர்க்கார் உணர வேண்டும். ஆகவே இதற்கு ஒதுக்கப்பட்டுள்ள பணம் பூராவும் பாங்கு மூலதனமாக இருப்பதைத் தவிர ஒன்றும் பிரயோசனம் இல்லை. சொஸை டிகளின் அபிவிர்த்திக்கு ஒன்றும் உபயோகப்படாது என்பதை சர்க்காருக்கு கவனப்படுத்துகிறேன்.

" இன்றைக்கு புது சொஸைடிகளுக்கெல்லாம் கடன் கொடுக்கப்பட்டுள் ளது என்று மந்திரி சொல்கிறார். ஆனால் உண்மையில் பல சொஸை டிகளுக்கு இன்னும் பணம் கிடைக்காமல் உற்பத்தியே நடைபெறுவது கிடையாது. இதனால் பல சொஸைடிகள் பொய்க் கணக்கு எழுதப்படுவத ற்கே உபயோகப்படுகிறது. ஆகவே ஒட்டு மொத்தமாகப் பார்க்கும்போது இது வரையில் சர்க்கார் செலவிட்டுள்ள 43 லட்ச ரூபாயில் பெரும் பகுதி அதாவது 90 பங்கு சிலருடைய தவறான வழிக்கே பயன் படுத்தப் பட்டிருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

12–20 p.m. " இது கூட்டுறவு டிபார்ட்மெண்டிலுள்ள எல்லா அதிகாரிகளுக்கும் தெரியும். கூட்டுறவு சொஸைடி மூலம் வினியோகிக்கிற செஸ்பண்டு உண் மையில் நெசவாளர்களுக்குப் போய்ச் சேருவதேயில்லை. நான் சொல் வது உண்மையா இல்லையா என்பதை வேண்டுமானால் ஒரு கமிட்டியை ஏற்படுத்தி விசாரிக்கட்டும். அந்தக் கமிட்டியில் சர்க்கார் தரப்பினர்களே அதிகம் இருக்கட்டும். எங்களால் இந்த உண்மையை கமிட்டியில் நிரூ பிக்கமுடியும். ஒருவர் வீட்டுப்பையன் தினம் 2 அணு கொண்டுவந்தான். அதனால் அவன் பெற்றோர்கள் சந்தேகமடைந்து, ' ஏதடா உனக்கு பணம் ' என விசாரித்ததற்கு, ' இல்லேப்பா இப்போதெல்லாம் இரண் டணு கிடைக்கிறது இல்லை—ஒரு அணுதான் கிடைக்கிறது. அதுவும் ஒரு

4th March 1955] [Sri T. S. Ardhanari]

கையெழுத்துப் போடுவதற்கு கூட்டுறவு சொஸைடியார் 1 அணா கொடுக்கிறாங்க,' என்று பதில் சொன்னான். இப்படி பணம் கொடுத்து எதிர் கட்சிக்காரர்களிடம் கையெழுத்து வாங்கப்படுகிறது. இது விஷயத்தை சர்க்கார் நன்கு கவனிக்கவேண்டும். எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்லுகிறார்களே எனத் தட்டிக்கழிக்கக்கூடாது. ஏற்கனவே கிடைத்த கூலிகூட இன்று நெசவாளர்களுக்குக் கிடைக்கவில்லை. செஸ் பெண்டினால் ஏற்படக்கூடிய அனுகூலம் முழுவதும் நெசவாளர்களுக்கு கிடைக்கும்படி செய்யவேண்டும். ஒவ்வொரு இடத்திலும் சர்க்கார் நேரிடையாக ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்கி ஒரு மில் கட்டலாம். அதில் நூற்கும் நூலைக்கொண்டு பாக்டரி முறையில் 100 தறி 200 தறிகள் ஒரே இடத்தில் வைத்து தொழிலாளர்களைக் கொண்டு வேலை செய்யச் சொல்லலாம். இன்னும் ஒரு பகுதி பணத்தைக் கொண்டு வியாபாரத்தில் ஈடுபடுத்தலாம். இப்படிச் செய்தால் நமக்கு ஒரு நிரந்தர மூலதனமாக இருக்கும். இப்படி வருடா வருடம் மத்திய சர்க்காரில் இருந்து கிடைக்கும் சுமார் 80 லட்ச ரூபாய் செஸ் நிதியையும் 10 வருடம் சேர்த்தால் 8 கோடி ரூபாய் கிடைக்கும். இது ஒரு நிரந்திர மூலதனமாக வைத்துக்கொண்டு 5 லட்சம் கைத்தறிக்காரர்களையும் சாவில் இருந்து நம்மால் காப்பற்ற முடியும் என்று உறுதியாக நம்புகிறேன்.

"விவசாயிகளுக்கு நன்மை செய்கிறோம், நெசவாளர்களுக்கு நன்மை செய்கிறோம் என்று வெறும் வாயளவிலே சொல்லிக்கொண்டேமட்டும் இருந்தால் போதாது. அதைக் காரியத்தில் காட்டவேண்டும். எந்தத் திட்டத்தையும் நல்ல முறையில், நடைமுறையில் கொண்டுவருவதற்கு பாடுபடாது ஐந்து வருஷத் திட்டம் போட்டோம், பத்து வருஷத் திட்டம் போட்டோம் எனத் திட்டங்களை மாத்திரம் போட்டுக்கொண்டு போவதில் பிரயோஜனமில்லை. நாம் கூறிய விஷயங்களை யெல்லாம் கனம் மந்திரி அவர்கள் பரிசீலித்து தக்க பதிலையும் அளிப்பார்கள் என நம்பிக்கையில் என் பிரசங்கத்தையும் முடித்துக்கொள்ளுகிறேன்.

* **Sri T. P. ELUMALAI** :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த ஆண்டு வரவு சிலவு திட்டத்தை முழு மனதோடு ஆதரிக்கும் முறையில் என் கருத்து சில சொல்ல விரும்புகிறேன். இவ்வாண்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு சிலவு திட்டம் எதிர்காலத்தில் ஏழைகளுக்கு நல்ல வழி வகைகள் வகுக்கப்பட்டும் நாட்டின் மக்களுக்கு பொறுப்புணர்ச்சியை எடுத்துரைக்கும் திட்டமாகவும் இருக்கின்றது. உதாரணமாக கனம் நிதி மந்திரி அவர்கள் தனது வரவு சிலவு திட்ட உரையை தமிழில் அச்சிட்டு கொடுத்தமைக்கு ஆங்கிலம் நன்றாக தெரியாத கனம் அங்கத்தினர்கள் சார்பாகவும் நன்றி செலுத்துகிறேன். மேலும் சட்ட சபை நடவடிக்கைகள் எல்லாவற்றையும் தமிழில் உடனடியாக மாற்றாவிட்டாலும் சில முக்கிய நடவடிக்கையையாவது தமிழில் அச்சிட்டு கொடுக்க கோருகிறேன். நிற்க தமிழ் நாட்டின் தவ புதல்வர் கனம் காமராஜ் அவர்கள் தலைமையில் இருக்கும் இந்த மந்திரி சபையே இதுவிஷயத்தில் தாமதித்தால், வைத்தியர் கைவிட்ட வியாதியஸ்தர் நிலைமைபோல் ஆகிவிடும் என்று எச்சரிக்க விரும்புகிறேன். இந்த அரிய சேவையினால் ஆங்கிலம் நன்றாக தெரியாத மெம்பர்கள் சட்ட சபை நடவடிக்கைகளை நன்றாக புரிந்து நாட்டின் பொது மக்களுக்கு சேவை செய்ய முடியும். தமிழை விரும்பும் மெம்பர்கள் அனைவரும் பொது மக்கள் சேவையையே தங்கள் முழுநேர வேலையாக கொண்டிருக்கின்றார்கள் என்பதை சர்க்காருக்கு தெரிவிப்பதோடு ஒரு சிலரைப் போல் ஒழிந்த நேர வேலையாக கொள்ளவில்லை என்றும் தெரிவிக்க விரும்புகிறேன். ஆகையால் இது விஷயத்தில் உடனடி நடவடிக்கை எடுத்து இந்த பெரும் குறையை தீர்த்து ஊழியமே பெரியதென நினைக்கும் இந்த மந்திரிசபை, தமிழ் தாயின் ஆசிபெற வேண்டுகிறேன். 12-25 p.m.

"இந்த நாட்டின் ஆசிரியர்களின் குறைகளையும், போலீஸ்காரர்களின் குறைகளையும் உடனடியாக கவனிக்கவேண்டும். காரணம் நாட்டு மக்களின் அறிவு வளர்ச்சிக்கும், சத்தியநெறிக்கும் நாணய வாழ்க்கைக்கும், நீதியை காக்கவும், முக்கிய பொறுப்புள்ள ஆசிரியர்களுக்கும், போலீஸ்

சிப்பந்திகளுக்கும் பொருளாதாரத்தில் வசதி செய்துதர சர்க்காரை மிகவும் தாழ்மையாக கேட்டுக் கொள்ளுகிறேன். ஏனென்றால் இவர்களில் ஒரு சிலருடைய நேர்மை குறைவிற்கும் துர்பிரசாரத்திற்கும் இவர்களின் வாழ்க்கை சிக்கலே காரணம் என்று குறிப்பிட விரும்புகிறேன். மேலேய நாட்டில் தனிப்பட்டவர்களுடைய வாழ்க்கையில் குறைகள் கண்டு சர்க்காரை குறைகூற முடியாது. உதாரணமாக ரஷியாவில் சர்க்காரை குறை கூறினால் ராஜ துரோக சட்டம் வந்துவிடும். ஆனால் நம் இந்திய, ஜன நாயகத்தில் இந்த அவல நிலே இல்லாததால் சர்க்கார் நிர்வாக பொறுப்புள்ளவர்களே, சர்க்கார் நிர்வாகத்தை குறைகூற முந்துகிறார் கள். இந்த கைங்கரியத்தில், வாழ்க்கையில் பாதிக்கின்ற ஆசிரியர், போலீஸ் பகுதியில் வேலே செய்கின்ற நண்பர்களில் ஒரு சிலர் கடமை உணர்வு தெரியாமல் சர்க்காரை குறை கூறுவதினால் மக்களிடத்தில், ராஜீய விஸ் வாசமும், தேச சேவையின் ஒத்துழைப்பும், குன்றி நம் தமிழ் நாட்டின் வளமே குறையும் என்ற காரணத்தால் இந்த இரண்டு பகுதியினர்க ளாகிய, ஆசிரியர், போலீஸ் சிப்பந்திகளுக்கு அவசியம் சம்பள உயர்வோ, அல்லது வேறு விதமாகவோ, இவர்களின் பொருளாதார முன்னேற்றத் திற்கு வழி செய்யவேண்டுகிறேன். இது சர்க்காரின் நிர்வாகத்திற்கு மிக அவசியம் எனவும், வற்புறுத்துகிறேன்.

" தவிர, தொழிலாளர்களின் நிலேமை சர்க்காரைப் பொறுத்தமட்டில், அனுதாபத்துக்குரியதாக இருந்துவருவதோடு, பல நன்மையான சட்டம் செய்வதையும் பாராட்டுகிறேன். ஆனால் தொழிற்சாலே முதலாளிகள் எங்கு பார்த்தாலும், ஆள்குறைப்பு திட்டம் கொண்டுவந்து வேலே இல்லாத நிலேமையை உண்டாக்கி வருகின்றார்கள். உதாரணமாக திருவொற்றியூரில் இருக்கும் திக்குச்சி கம்பெனியில் (விம்கோ) ஆள் குறைக்க பல சூழ்ச்சிகள் செய்துவருகின்றார்கள். இதுவிஷயத்தில் தொழிலாளர்கள் மிகவும் பரி தாபத்துக்குரிய நிலேமையில் இருந்துவருகின்றார்கள். ஆகையால் இது விஷயங்களில் சர்க்கார் தலேயிட்டு, இதற்கு நியாயமான குறையைக் கண்டு ஆவன செய்ய கோருகிறேன். கிராமங்களில் வேலேயில்லாத்திண்டாட்டத்தைப் போக்கி கிராமங்களில் இருக்கும் புறம்போக்கு நிலங்களேயும், ஜமீனுக்கு சொந்தமான நிலங்களேயும், ஏழை விவசாய ஜனங்களுக்கு ஜாரிசெய்து கொடுத்து கூட்டுறவு முறையில், பயிர் செய்ய உதவி செய்தால், வேலே யில்லாத் திண்டாட்டத்தை போக்குவதோடு, உற்பத்தியையும் பெருக்க வசதி ஏற்படும் என்று சர்க்காருக்கு ஆலோசனே கூற விரும்புகிறேன். உதாரண மாக சைதாப்பேட்டை தாலூக்காவில் உள்ள மணலி கிராமத்தில் ஜமீன் நிலம் சுமார் 300 ஏக்கருக்குமேல் வீணுக இருக்கின்றது. இதை கூட்டு றவு முறையில் விவசாயத்திற்கு எடுத்துக்கொண்டால், நாட்டின் வளர்ச்சி க்கும் இது உதாரணமாக இருக்கும் என்று சர்க்காரை வற்புறுத்து கிறேன். உதவி சபா நாயகர் அவர்களே, மீன் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டு கடல் ஓரங்களில் வசிக்கின்ற மக்களுக்கு சர்க்கார் தனி டிபார்ட் மெண்டை வைத்து, அவர்கள் குறை போக பல முறையில் வேலே செய் தாலும் உண்மையில் அவர்களுக்கு சர்க்கார் நினைக்கின்ற அளவு நன்மை கிடைக்கவில்லே என்று சொல்லலாம். உதாரணமாக விற்பனேக்கு மீன் கொண்டுபோக லாரிகள் ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கின்றது. ஆனால் இதன் மேற்பார்வையை அந்த சமூகத்தில் இருப்பவருக்கோ அந்த சமூகத்தால் நடத்தப்படுகின்ற கூட்டுறவு சங்கங்களுக்கோதான் கொடுக்கவேண்டும் என்ற நிபந்தனே இல்லாததால் தனிப்பட்டவர்கள்கூட இதை நடத்து கிறார்கள். இதனால் சில இடங்களில் இந்த லாரி போக்குவரத்துக்கு முக்கிய த்துவம் இல்லாமல் போய்விடுகின்றது. ஆகவே இது விஷயமான வேலே களுக்கு, அந்த சமூகத்தில் பிறந்தவர்களே முன் வைத்து, மீன் இலாக்கா வேலே செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும் இவர்கள் தொழிலுக்கு மிக முக்கியமான கட்டுமரங்களே சர்க்காரே முன் பணம் போட்டு வெளி இடங்களிலிருந்து வரவழைத்து ஏழை மீன் பிடிக்கும் தொழிலாளருக்கு நியாயமான விலேயில் கொடுத்து இந்த ஏழை சமூகத்தை ஆதரிக்க கோருகிறேன். தவிரவும் ஏழைகளே நினைக்கும்போது சென்னேயில் ரோட்டு ஓரங்களிலே நாம் பார்க்கிறோம், பிளாட்பாரங்களிலே ஏழை மக்கள் சட்டியும், பானேயும் வைத்துக்கொண்டு

அங்கேயே சமையல் செய்வதும், உறங்குவதுமாக இருப்பதை நாம் பார்க்கிறோம். இதைப்பார்க்கும்போது நமக்கு ஒரு பக்கம் பரிதாபமாகவும், ஒரு பக்கம் அவமானமாகவும் இருக்கிறது. இந்த அவல நிலையைப் போக்க இவர்களுக்கு அரசாங்கம் வீட்டு வசதி செய்துக்கொடுத்து, மேற்கொண்டு இப்பேர்பட்ட நிலைமை ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ளவேண்டும். இல்லையென்றால் மாற்றுக் கட்சிக்காரர்கள் இந்தச் சந்தர்ப்பத்தை உதாரணமாக வைத்துக்கொண்டு அவதூருகப் பேசி இதை பிரசாரம் செய்கிறார்கள். இவ்விதமான வாய்ப்பு இல்லாமல் செய்யவேண்டுமென்று சர்க்காரை மிகப் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன். குறிப்பாக இது விஷயத்தில் ஒரு தனி கமிட்டி போட்டு சென்னையிலுள்ள பெரிய கடைகளிலிருந்தும், துணிக்கடைகளிலிருந்தும், சகாய நிதியாக பணம் வசூல் செய்து இந்த பெரும் குறையை தீர்த்துவிடலாம் என்று சர்க்காருக்கு ஆலோசனை கூறுவதோடு, இதற்காக போடப்படுகின்ற சகாய நிதி கமிட்டியில் சென்னை போலீஸ் அதிகாரிகளையும் நகர சபை அதிகாரிகளையும் சேர்த்துக்கொண்டு இப்பெரும் குறையை சுலபமாக தீர்க்க முடியும் என ஆலோசனை கூறுகிறேன்.

" உதவி சபாநாயகர் அவர்களே, நீர்ப்பாசன விஷயமாக சொல்ல வேண்டுமானால், மக்களிடத்தில் இந்த சர்க்கார் கொண்டுள்ள அபிமானத்தை பாராட்டுவதோடு நன்றி செலுத்தவும்கூட கடமைப்பட்டும் இருக்கின்றேன். மேலும் சர்க்கார் திட்டம் முழு வெற்றிகரமாக நிறைவேற வேண்டுமானால், இதன் சார்பாக மேற்கொள்ளும் வேலைகள் அந்தந்த கிராம மக்களிடத்திலேயே ஒப்படைத்து இந்த வேலை பூர்த்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த வேலைகளில் ஈடுபடுகின்ற சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் காலதாமதமில்லாமல் நீர்பாசன திட்டங்களைப் பூர்த்திசெய்ய தங்கள் சிப்பந்திகளை துரிதப்படுத்தவேண்டும் என்று சர்க்காரை கேட்டுக்கொள்ளுகிறேன். 12-30 p.m.

" ஸ்தல அபிவிருத்தி திட்டம் இதன் சார்பாக தீக்குச்சி தொழிற்சாலைக்கு சமீபத்தில் ஒரு ரயில்வே நிலையம் கட்டவேண்டும் என்று சர்க்காரை கேட்டுக்கொள்ளுகிறேன். இதனால் 5 தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளருக்கு நன்மை ஏற்படும். தற்போது அவர்கள் திருவொற்றியூர் ரயில்வே நிலையத்திலிருந்து சுமார் 2 மைல் தூரம் இறங்கி ரயில் போன மார்க்கத்திலேயே ஓடி வரவேண்டியவர்களாக இருக்கின்றார்கள். ஆகையால் இந்தத் திட்டத்தின் நோக்கம் பூர்த்தியாக வேண்டுமானால் இந்த அவசியமான வேலையை மேற்கொள்ளவேண்டுகிறேன். உதவி சபாநாயகர் அவர்களே, கல்வி விஷயமான குறைகள் பல இருந்தபோதிலும் எனக்கு நேரம் இல்லாததால் சில முக்கிய விஷயத்தைப்பற்றி மட்டும் சொல்லலாமென நினைக்கின்றேன். பொதுவாக பள்ளிகள் அதிகம் திறக்கவேண்டும் என்று நினைக்கின்ற நாம், வருஷக் கணக்கில் நடக்கின்ற ஆரம்பப் பள்ளிகளை ஜில்லா கல்வி அதிகாரி எடுக்க மறுக்கின்றார்கள். உதாரணமாக, மாதவரம் சேரியில் சுமார் $1\frac{1}{2}$ வருஷ காலம் சேரி மக்களே 150 ரூபாய் மாதம் செலவு செய்து நடத்தி வருகின்றார்கள். இந்த பள்ளிக்கு, வேண்டிய அவசிய அம்சங்கள் இருந்தும்கூட, ஜில்லா கல்வி அதிகாரிகள் காலதாமதம் செய்கிறார்கள். இதனால் இந்த பள்ளியை நிறுத்திவிடவேண்டிய கட்டம் வந்தும்கூட அதிகாரிகள் கவனிக்கவில்லை. ஆகையால் கல்வி விஷயத்தில் மக்கள் முன்வரும் இடங்களில் உடனடியாக சர்க்கார் அதிகாரிகள் உத்தரவு கொடுப்பதோடு சர்க்கார் உதவியையும் உடனடியாக கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதேபோல்தான் உயர்தர பாடசாலை விஷயமாகவும், வடகரை கிராமத்தில் இருந்துவருகின்றது. இதுவிஷயமும் வருத்தப்படவேண்டியதாக இருக்கின்றது. ஆகவே கல்வி விஷயமான நிபந்தனைகளிலுள்ள சட்டத்தை சில வற்றை நீக்க பள்ளிகள் திறக்கும் மார்க்கத்தை துரிதப்படுத்தவேண்டுகிறேன்.

" உதவி சபாநாயகர் அவர்களே பொது ஜனங்களுக்கு நன்மை தரக்கூடியதும், மிகவும் விளக்கமான முறையிலும் போடப்பட்ட இந்த ஆண்டு வரவு சிலவு திட்டத்தையும் குறை சொல்லும்

[Sri T. P. Elumalai] [4th March 1955

அங்கத்தினர்களை நான் கேட்டுக்கொள்ளுகிறேன். தாங்கள் ஏழைகளுக்கு எழுத்திலே சட்டம் கேட்கின்ற மெம்பர்கள் தங்களிடத்திலே தங்கள் நெருங்கிய உறவினர்கள் இடத்திலோ வேலை செய்கின்ற ஏழைகளுக்கு தங்களால் கூடுமான நிரந்தர உதவிசெய்ய முன் வரவேண்டும். உதாரணமாக தங்களிடத்தில் கார் ஓட்டிகளாவே வீட்டின் பண்ணையில் வேலை செய்கின்ற நிரந்தர கூலிகளாகவோ, இருந்தால், அவர்களுக்கு சிறிய வீடுகள் கட்டிக்கொடுப்பது இனாமாக, வருஷாவாரியில், போனஸ் கொடுப்பதுபோன்ற வசதிகளை கனம் மெம்பர்களே செய்தால் மற்ற தனிப்பட்ட முதலாளிகளுக்கும் இது உதாரணமாக இருக்கும். மற்றவர்களையும் நாம் கேட்பதற்கு வசதியும் ஏற்படும். ஆகவே இந்த ஆலோசனையை கனம் சபாநாயகர் மூலமாக, மெம்பர்களை கேட்டுக்கொள்ளுகிறேன். தவிர எல்லா தாலூகாகளிலும் ஏழைகள் வசிக்கும் கிராமங்களிலும், ஹரிஜனங்கள் வசிக்கும் காலனிகளிலும் சில குறிப்பிட்ட இடங்களை சட்டசபை மெம்பர்கள் மூல்யமாக தேர்ந்தெடுத்து கூட்டுறவு முறையில் வீடுகள் கட்டிக் கொடுக்க சர்க்காரை கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த வேலை ஒவ்வொரு வருடமும் பூர்த்தியாகவேண்டும் என்றும் ஆலோசனை கூறி இந்த மானியத்தை முழுமனதோடு ஆதரித்து இந்த வரவு சிலவு திட்டத்தை தயார் செய்த இந்த மந்திரி சபைக்கு என் வணக்கத்தைச் சொல்லி என் பேச்சை இதோடு முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்."

12-40 p.m. * Sri T. C. NARAYANAN NAMBIAR :—" Mr. Deputy Speaker, Sir, I quite welcome the printing of the Hon. the Finance Minister's Budget speech in Tamil. Since the inauguration of this Assembly, the hon. Members on this side and the hon. Members who know only the regional language, that is, Tamil alone were making this demand. While recording my appreciation and gratitude for the Government for accepting the suggestion made by these hon. Members I submit that it is with great regret I see that it has not been printed in Malayalam. I can understand that the majority of the Members of this House and the population of the State are Tamil speaking brethren. To this extent, of course, prominence will have to be given for Tamil, but I am compelled to say that because of the attitude of the Government, that is, not giving encouragement to the Malayalam language and literature, we are suffering a lot. We are not going to be in this State and whether some others like it or not we have to fight it out and see that a Kerala State is established and this is going to become a fact. There is no doubt about it. There is a typewriter for the Tamil language while there is none for the Malayalam language. To this extent we have to reform some of our letters. How are we to do this without State aid?

" Moreover, there is a Shorthand system here in this State for the Malayalam language also. On a previous occasion, on a motion of privilege, I know that a shorthand reporter has been appointed a year or so ago for reporting Malayalam speeches. But that gentleman has come from the Travancore-Cochin State. Of course, we are going to have our Kerala State, but as long as we are here attached to this State, we should be given the necessary facilities for training in Malayalam Shorthand.

" It is not only so in this respect but even in the recently established Rent Courts some of the Magistrates are adamantly saying that they would conduct the proceedings of the Court only

4th March 1955] [Sri T. C. Narayanan Nambiar]

in English. For example, in Cannanore, we had to go to the extent of having a great demonstration outside the Court. The tenants and the peasants who had given applications to the Court had to be mobilized and they shouted slogans that if the Magistrate persisted in conducting the proceedings in English without giving a translation to the tenants and peasants who knew only Malayalam that they would be most painfully compelled to say that the Magistrate who wanted to speak only in English would have to go to England and not remain in Malabar. Whether it is right or not, that is the sentiment of the people. In some other district in Tamilnad the whole Governmental proceedings are conducted in Tamil. What I want to say is that it is high time that the regional language, especially the mother-tongue, is made the medium for all these things.

" Another great feeling of helplessness among the Malayalees is the recent statement of the Hon. the Minister for Finance that the medium of instruction even in the Universities should be the regional language. While I heartily welcome what he has said, I do not know what will be the fate of the poor Malayalee students who would have to come to these universities. It is not that I want the English language to be retained. It will be only Tamil in these universities and not Malayalam. Some measures will have to be adopted in such a contingency. I think the Malayalee Colleges would have to be affiliated to the Travancore University or a university in Malabar would have to be organized till the Kerala State is established.

" I quite welcome the concession granted to the children of the poor and middle classes to study freely up to the III Form. A sum of Rs. 50 lakhs has been allotted to compensate the loss that the private managements would incur as a result of this concession. In this connection, I would invite the attention of the Hon. the Finance Minister to the fact that most of the aided institutions are charging a higher rate of fees and not the standard rates. Even now the Government is giving rebate in regard to the existing educational concessions at these prevalent high rates. The Government have therefore been victimized to this extent. I would therefore request the Government to take note of this fact that some of the managers of aided schools who did not collect fees in full so far, now will come forward to give their full amounts and get the rebate from the Government at abnormally high rates. Anyhow, I welcome the concession.

" With regard to the new taxation proposals, so many Hon. Members have expressed their opinion and I am sure even the Hon. the Finance Minister who has presented the Budget will not be very glad about it. The present position of our peasants and tenantry is that they are not able to pay anything more. Any further imposition on them will be like killing the goose that lays the golden egg. Things are going in a vicious circle. Industry is on the verge of collapse because of lack of purchasing power on the part of the

[Sri T. C. Narayanan Nambiar] [4th March 1955

people. If we examine why this purchasing power is not there, the reason is found to be the fact that agrarian reforms have not been introduced. The new taxation proposals will therefore hit the peasants hard.

Dr. U. Krishna Rao spoke very eloquently when he was the Councillor and Alderman about the injustice meted out to the Corporation of Madras by the Government of Madras in the matter of the distribution of the revenue derived by way of motor vehicles tax. Sri Venkataswami Naidu also spoke eloquently about this injustice when he was also the Councillor. But during their term of office as Ministers they also failed to represent the case of the Corporation of Madras. To-day an ex-Mayor of Madras led a deputation to this very Government and asked that Rs. 20 lakhs should be given from out of the revenue derived by the State Government by way of motor vehicles tax to the Corporation of Madras. The case of the Corporation is a very simple one. When the Motor Vehicles Tax was introduced compensation was paid to the Corporation of Madras to the tune of Rs. 3·56 lakhs. That amount has remained stable though the amount derived by way of the tax has grown rapidly since that time. Out of roughly about 40,000 vehicles in the State of Madras about 13,000 vehicles are registertd in the City of Madras. One fourth of the petrol consumed in the State is consumed by motor vehicles using the roads maintained by the Corporation of Madras. The Corporation spends about Rs 32 lakhs per annum on the maintenance of roads used by these motor vehicles. The tax is supposed to be levied for the building up of roads and maintenance of roads used by those vericles. The Motor Passenger Transport system in the City of Madras is a nationalized industry and the motor transport vehicles of the Government of Madras are using the very roads maintained by the Corporation of Madras. Still only an amount of Rs. 3·56 lakhs is given as compensation. Even out of this Rs. 3·56 lakhs, the Government get from the Corporation of Madras Rs. 1½ lakhs by way of tax on vehicles owned and used by the Corporation of Madras on the roads maintained by them. Very recently the Madras Government have agreed to grant a sum of Rs. 5 lakhs for the maintenance of roads. But when compared to the amount derived by way of tax on motor vehicles registered in the City of Madras it is an inadequte amount. Therefore, in justice and fairness to the Corporation of Madras the Government should allot a larger share of the motor vehicles tax.

" Then, Sir, I come to another matter. The pamphlet on the Five-Year Plan of the Madras State makes another very significant omission. There is no reference at all to labour. That chapter is completely omitted. The Central Government have been urging on the State Governments that there should be an early and effective implementation of the Minimum Wages Act. The manner in which this State Government have sought to implement the Act is to say the least a farce and a hoax. Minimum Wages Committees have been set up . . ."

Mr. SPEAKER :—" The hon. Member has got two more minutes."

[4th March 1955

* SRI S. C. C. ANTHONY PILLAI :—" The whole effort of these committees is concentrated in finding out what is the general level of wages. The minimum wages recommended by committees is much lower than that. Under the Minimum Wages Act they are to fix the basic wage and the dearness allowance. But in most cases they have fixed only basic wages and not dearness allowance. The net result is that the implementation of the Minimum Wages Act is a sheer waste of money and a sheer waste of time because no possible benefit is derived under this Act by those for whom it is intended.

" Then, Sir, the price of yarn and cloth both in the State of Madras and in the Indian Union has soared considerably in spite of the fact that the price of cotton has dropped steeply. In spite of the fact that mill owners are making huge profits, no effort has been made to implement the recommendations of the Tripartite Committee. In every sphere—whether it is in the sphere of working class or whether it is in the sphere of middle class—we find this niggardly attitude adopted by this Government."

MR. SPEAKER :—" The hon. Member's time is up."

(Then Mr. Speaker called on the next speaker.)

9-20 p.m. * SRI T. V. SANNASI :—" கனம் சபாநாயகர் அவர்களே, இருந்த இடத்திலேயிருந்து, நினைத்த அளவிலே மக்களுக்கு உழைப்பு இல்லாமல் ஹிம்சை இல்லாமல் எல்லா சௌகரியங்களையும் சிருஷ்டிக்கும் படியான தபோ சக்தி இந்த மந்திரிசபைக்கு இல்லையானாலும் மனித சக்திக்கு உட்பட்ட அறிவு அனுபவங்களைக்கொண்டு, கால சந்தர்ப்பத்தை அனுசரித்து நாட்டு முன்னேற்றத்திற்கு ஏதுவான வகையில் அமைத்த இந்தத் திட்டத்தை மனித இனத்திலே பிறந்த ஒருவன் என்ற முறையிலே மனப்பூர்வமாகப் பாராட்டுகின்றேன்.

" எந்த அறிவாளிகளாகிய அமைச்சர்களும், எதிர்க்கட்சியினரால் குறை சொல்லாத வகையிலே எந்தக் காலத்திலும் எந்த நாட்டிலும் பட்ஜெட் ஒன்றை வகுத்ததாக சரித்திரத்திலேயே கிடையாது. இருக்கவும் முடியாது. இதைத்தான் உலக அனுபவத்திலே நாம் பார்த்துவருகிறோம்.

" நிலவரி அடிப்படையில் ரூபாய்க்கு இரண்டணா சர்சார்ஜ் விதிப்பதைப் பற்றி பெரும்பாலோர் வருத்தப்படுகிறார்கள். ஆனாலும், உழுது வாழச் சிறிதும் சொந்த நிலமற்ற குடியானவர்கள் இந்த வரியை வரவேற்கிறார் கள். நெல் மரத்தில் காய்க்கின்றதா, செடியில் காய்க்கின்றதா என்று கூடத் தெரியாமல் ஆயிரம் இரண்டாயிரம் ஏக்கராக்களை, தேவைக்குமேல், வைத்துக்கொண்டிருப்பவர்களைத் தவிர ஒரு ஏக்கரா, இரண்டு ஏக்கரா வைத்துக்கொண்டிருக்கிற ஏழை விவசாயிகள்கூட வரவேற்கிறார்கள். அதிக வருமானம் அடைபவர்கள் இச் சிறிய வரியைக் கொடுப்பதை எல்லோரும் வரவேற்கிறார்கள். எங்கள் பகுதியில் ரூபாய்க்கு இரண்டணா வரி கொடுக்க தயாராயிருக்கிறார்கள். காரணம் என்னவென்றால் இதுவரையிலும் கொடுத்த வரிகளினால் போதிய ரோடு முதலிய வசதிகள் வராத காரணத் தால் இந்த வரியைக்கொண்டாவது இனி வசதி கிடைக்கும் என்ற நம்பிக் கையினால் இன்னும் அதிகமாகக்கூட வரிகொடுக்கத் தயாராயிருக்கிறார்கள்.

" இந்த வரியிலே ஒரு ஏக்கரா, அரை ஏக்கரா வைத்துக்கொண்டிருப்ப வர்களுக்கு கொஞ்சம் சலுகை அளித்தால் நலம் என்பது பெரும்பாலோ ருடைய அபிப்பிராயமாயிருந்து வருவதை ஓரளவு நான் தெரிந்திருக்கி றேன். ஆனால் ஒன்று முதல் நாலைந்து ஏக்கராக்கள் வரையில் நிலம்

வைத்திருப்பவர்களுடைய எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் அதை எடுத்துவிட்டால் வரி போடவேண்டிய அவசியமே இல்லை என்று ஏற்படுகிறது. விலைவாசிகள் மிகவும் இறங்குமுகமாக இருப்பதால் இந்த நிலையில் இன்னும் இறங்குமானால் அவசியம் அரசாங்கத்தார் இந்த வரியை ரத்து செய்துதான் ஆகவேண்டும். அது மனிதப் பண்பும்கூட.

“தற்போது நாட்டின் பொறுப்பேற்று நிர்வாகத்தை நல்லமுறையில் நடத்திக்கொண்டுவரும் அமைச்சர்களுக்கு இந்த அசெம்பிளியில் மட்டுமல்ல மக்களிடத்திலும் அளவு கடந்த செல்வாக்கு இருக்கிறது. மக்கள் மனப்பூர்வமாக மதிப்பு கொடுக்கின்றார்கள். என்றாலும், மக்களுடைய மதிப்பையும் மக்கள் மன்றத்தினுடைய மதிப்பையும் அளவு கடந்து பெற்றுள்ள அமைச்சர்களது உத்தரவானது அலுவலகத்திலுள்ள வினையாளர்களிடத்தில் செல்வாக்குப் பெறுகின்றதா என்று பார்த்தால் சில இடங்களில் தகராறாகத்தான் இருக்கிறது. நூற்றைம்பது வருஷங்களாக நாட்டை அடிமைப்படுத்தி ஆண்டுவந்த அந்நியர்களுக்குக் கீழ்ப்பட்டு உத்தியோகம் செய்த பழக்கத்தினால்தான் இந்நிலை என்று நினைக்கின்றேன். சொந்த நாடு, சுதந்திர சர்க்கார் என்ற எண்ணம் படிக்கத் தெரியாத பாமரருக்குக்கூட ஏற்பட்டிருக்கும்போது படித்த ஆபீசர்களுக்கு ஏனோ ஏற்படுவது சிரமமாக இருக்கிறது. இது பழக்க தோஷம் போலும்.

“தமிழ்நாட்டில் தமிழ்மொழியை ஆதரிப்பவர்களைக்கொண்ட மக்களுடைய சர்க்காரிலே தமிழ் இவ்வளவு புறக்கணிக்கப்படுகிறதென்பதை நினைத்தால் வெட்ககரமாக இருக்கிறது. இராமருடைய பாதரட்சைகளை பதினான்கு வருடங்கள் வைத்து ராஜ்யபாரம் செய்ததைப்பற்றி சுயமரியாதைக்காரர்கள்கூட எதும் அழுத்தமாகக் குறை சொல்லவில்லை. அதனுடைய உண்மைத் தத்துவம் என்னவென்றால் சகோதர அன்பு. நீதியின் தத்துவம் என்ற அடிப்படையில் அண்ணனுடைய பாதரட்சையை தனக்களித்த சிம்மாசனத்தில் வைத்துப் பூஜை செய்தான் தம்பி என்றால் அதிலே ஆச்சரியம் இல்லை. கண்ணியமும் உண்டு. அடிமைப் படுத்திக்கொண்டிருந்த அந்நியன் இந்த நாட்டைவிட்டு அகன்றும் இன்னும் அவன் மொழிதான் நாட்டை ஆளுகிறது. ஆங்கில மொழி சிறந்ததாகக்கூட இருக்கலாம். ஆனால், ஆங்கிலம் படித்தவர்கள்தான் மரியாதைக்குரியவர்கள் என்று கருதும் நிலை மாறவேண்டும். பலகாலமாய் எதிர்த்துப் பேசிய எதிர்க்கட்சிக்காரர்களும்கூட இப்பொழுது நடப்பது பச்சைத் தமிழர் ஆட்சி என்று சொல்லும் இந்நிலையில்கூட நடைமுறையில் ஆட்சி தமிழில் நடந்தால் என்ன தப்பு ? தமிழ்நாட்டிலே தமிழனாகப் பிறந்த பாபத்தினால் தமிழ்க் கடவுளை தமிழால் போற்றுவதற்கும் பிறமொழிப் போட்டி, தமிழ் இசைக்கும் பிறமொழிப்போட்டி, எந்தத்துறையிலும் தமிழுக்கு சொந்த நாட்டிலேயே பிறமொழி எதிர்ப்பு. இவையெல்லாம் இந்த நாடு செய்த துர்ப்பாக்கியம் என்றுதான் சொல்லவேண்டும்.

“ஆங்கிலம் உலக மொழியாக இருக்கிறது என்று சொன்னாலும்கூட அந்தந்த ராஜ்ய அரசாங்கம் அந்தந்த ராஜ்ய மொழியில் நடந்தால் என்ன கெட்டுவிடும் என்று எனக்குத் தெரியவில்லை. பத்திரிகை உலகத்தால் பாராட்டப்படும் மேதைகள்கூட ‘தமிழ் நல்லதுதான், அது ரொம்பவும் புராதனமான பாஷைதான், இனிமை நிறைந்த பாஷைதான்’ என்றெல்லாம் புகழ்ந்தாலும் தமிழ்மொழி மட்டும் ஆட்சி மொழியாக இருப்பது கூடாது என்ற நோக்கத்தை மறைத்து சற்றுப் பொறுத்துச் செய்யலாம் என்று மழுப்புகிறார்கள். எருமை மேய்ப்பவன் முதல், மேல் இருக்கிறவர்கள்வரை தமிழ் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்று சொல்லும்போது, அது மொழி வெறி புத்தியென்று சொல்லுகிறார்கள் சில இன வெறியர்கள். கோயிலில் சொல்லப்படும் மந்திரங்கள் வடமொழியாக இருப்பதால் தமிழ் மக்கள் புரிந்துகொள்ள முடியாமல் இருப்பதைப்போல்தான் ஆங்கிலத்தில் ராஜ்ய நடவடிக்கைகள் நடப்பதும் என்று சொல்லத் தேவையில்லை. தமிழ் ஆட்சிமொழியாக வந்துவிட்டால் இவ்வளவு செலவழித்து ஆங்கிலம் கற்றது பிரயோஜனம் இல்லாமல் போய்விடுமே என்ற கவலையில் தமிழ்மொழியை ஆட்சிமொழி

யாக்கச் சிலர் தடைசெய்கிருர்கள். ஆங்கிலம் படித்துவிட்டவர்கள் தாங்கள் ஏதோ மற்றவர்களைவிட கௌரவப்பட்டவர்கள், மேம்பட்டவர்கள் என்று தங்களைத் தாங்களே நினைத்துக்கொண்டு இருக்கிற ஒரு காரணத்தினுல், தமிழ் ஆட்சிமொழியாக ஏற்பட்டால் தங்களுக்கு இருந்துவரும் போலிக் கௌரவம் போய்விடுமோ என்று நினைக்கிருர்கள் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது.

(Sri P. G. Karuthiraman in the Chair.)

" ஆட்சிபீடத்தில் அமர்ந்திருக்கும் அமைச்சர்கள் உத்திரவை எந்த அளவு அதிகாரிகள் நிறைவேற்றுகிருர்கள் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு. திருச்சி ஜில்லாவில் எல்லா அரசாங்க அலுவலகளும் தமிழில் நடைபெற வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்தும் அங்கு என்ன செய்கிருர்கள் என்ருல் ஆங்கிலம் தெரியாத ஹரிஜனங்களை மெம்பர்களாகப் போட்டு ஹரிஜனக் கமிட்டி என்று வைத்து உட்கார்ந்திருக்கிற தலைமை ஜில்லா அதிகாரிகளெல்லாம் 'ஒரு வார்த்தை' என்று தமிழில் சொல்லிவிட்டு ஆங்கிலத்தில் 'மன்னிக்கவேண்டும்' என்று சொல்லி ஆங்கிலத்தில் பேசுகிருர்கள். அந்தக் கமிட்டியில் என்ன நடக்கிறது என்று ஹரிஜன மெம்பர்களுக்கு ஒன்றுமே தெரியாமல் கஷ்டப்படுகிருர்கள். ஹரிஜனங்களுடைய நன்மைக்காக என்று சொல்லி ஆங்கிலத்தில் பேசுகிருர்கள். அந்தக் கமிட்டியில் என்ன நடக்கிறது என்று ஹரிஜன மெம்பர்களுக்கு ஒன்றுமே தெரியாமல் கஷ்டப்படுகிருர்கள். ஹரிஜனங்களுடைய நன்மைக் காக என்று சொல்லி ஒரு கமிட்டியை வைத்து, அது ஆங்கிலத்திலேயே நடைபெறுவதினுல் என்ன காரியங்கள் நடக்கின்றனவென்று புரியாமல் இருக்கிறது. தமிழில் நடவடிக்கைகள் நடக்கவேண்டுமென்று அரசாங்கம் போட்ட உத்தரவை திருச்சி ஜில்லா அதிகாரிகள் நிறைவேற்றும் முறை எப்படி இருக்கிறது என்று பாருங்கள். தமிழ் ஆட்சி எப்பொழுது இந்த நாட்டில் ஏற்படுகிறதோ அப்பொழுதுதான் இந்த நாட்டிலிருக்கும் பீடைகள் ஒழியும்; வறுமையும், ஜாதிப் பூசல்களும் நம்மைவிட்டு அகன்று ஓடும். ஆங்கிலம் கற்றறிந்த தமிழர்கள், தமிழ்நாட்டில் பிறந்த ஒரு பண்பாட்டினுல் எல்லோரும் இதை உணர்ந்திருப்பார்கள் என்று நம்புகிறேன். இத்தொல்லையால் ஹரிஜனங்களுக்கு நன்மை செய்யமுடியாமல் ஹரிஜன மெம்பர்கள் மிகவும் கஷ்டப்படுகிருர்கள்.

" ஹரிஜனங்களுக்காக வேண்டி தீண்டாமை விலக்குச் சட்டம் கொண்டு வரப்பட்டும் அதன் பலன் கிடைக்காமல் கருவிலேயே அழிந்துவிடுகிறது, சில பாகங்களில் கருத்தரித்து பிரசவம் ஆகும் நிலைமையில்தான் தீண்டாமை விலக்குச் சட்டம் இந்த நாட்டிலே இருந்துவருகிறது. சென்ற கூட்டத்தில் தீண்டாமையை ஒழிப்பதற்கு வெவ்வேறு ஜாதியினரும் கலப்பு விவாகம் செய்துகொள்ளவேண்டுமென்று கூறப்பட்டது. அதுவும் நடைமுறையில் வரமுடியாத ஒரு சங்கதி. எந்த நாட்டிலிருந்து இந்தப் பீடை வந்ததோ தெரியவில்லை. ஜாதி பேதம் வளர்ந்துவிட்ட காரணத்தினுல, ஜாதியினுல் தொல்லைப்பட்டு நாயினும் கீழாக வாழ்க்கை நடத்தும் ஹரிஜனங்களுக்குள்ளேயும் பேதம் புகுந்துகொண்டு இருப்பது பரிதாபத்திற்குரியது. ஜாதி வித்தியாசம் அதிகரித்துவிட்டதன் காரணமாக எல்லோரும் தமிழினம் என்ற உணர்ச்சியின்றி, ஒருவன் தன்னை மேலானவன் என்றும், மற்றவன் கீழானவன் என்றும் நினைத்துக்கொண்டிருக்கிருர்கள். பள்ளர்களுக்கும் பறையர்களுக்குமிடையேயும், பறையர்களுக்கும் சக்கிலியர்களுக்குமிடையேயும் பூசல் இருந்துகொண்டிருந்தால் எப்பொழுதுதான் இந்த வேற்றுமை நீங்குமோ தெரியவில்லை. ஹரிஜனங்களுக்குள்ளேயே பலவித பாகுபாடுகளும் வேற்றுமைகளும் வைத்துக்கொண்டு மேல்ஜாதியாராகிய பிராம்மணர், முதலியார், பிள்ளைமார்கள் ஆகிய ஜாதியினரிடமிருந்து பெண்களையோ பிள்ளைகளையோ சம்பந்தம் செய்துகொண்டால்தான் ஜாதி வித்தியாசம் ஒழியும் என்று நினைத்துக்கொண்டிருந்தால் அது மிகவும் அறிவீனமாகும். கழுதை கழிக்கும் லத்தியில் எந்த பாகம் உசத்தி, எந்த பாகம் மட்டம் என்று சொல்லமுடியுமா ? தங்களுக்குள்ளேயே ஒற்றுமையில்லாமல் இருந்துகொண்டிருந்தால் தீண்டாமை ஒழிப்புச் சட்டம் இருந்தும் என்ன பிரயோஜனம் ? ஆகவே, சகல தரப்பினர்களும் சேர்ந்து தீண்டாமை

ஒழிப்புச் சட்டத்தை நல்லமுறையில் அமுல் நடத்துவதோடுகூட, தீண்டப்படாதவர்களும் தங்களுக்குள்ளேயே வித்தியாசம் இருப்பதை நீக்கிக்கொள்ளவேண்டும். இவ்வித முன்னேற்றத்திற்குரிய இந்த வரவு செலவுத் திட்டத்தை நான் ஆதரித்து என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்ளுகிறேன்.''

* **Sri A. GOVINDASWAMY NAYAGAR**:—'' கனம் அவைத் தலைவர் அவர்களே! கனம் நிதி அமைச்சர் அவர்கள் வரவு செலவுத் திட்டத்தைத் தமிழிலே அச்சடித்துக் கொடுத்ததற்காக நான் நன்றி பாராட்டுகின்றேன். அவர் அவ்வளவு தைரியமாக அச்சடித்ததற்கு ஆவடி மகாநாடுதான் அவருக்குத் துணை செய்திருக்கிறது. ஆவடி மாநாட்டிலே நமது நிதி அமைச்சர் அவர்கள் தமிழிலே பேசியிருக்கிறார்கள். அங்குள்ள 9–32 p.m. வடநாட்டார்கள் ஆங்கிலத்திலே பேசுங்கள் என்று கூக்குரல் செய்திருக்கிறார்கள். அந்த சமயத்திலே நமது நிதி அமைச்சர் அவர்கள் இம்மகாநாடு தமிழ் நாட்டிலே நடைபெறுகின்றமையால், லட்சக்கணக்கான தமிழ் மக்கள் இம்மாநாட்டிலே கலந்துகொண்டிருக்கிறமையால் தமிழிலே பேசுகிறேன் என்றும், வடநாட்டாரை திருப்தி செய்வதற்காக ஆங்கிலத்திலும் பேசுகிறேன் என்று கெஞ்சும்படியான பரிதாபகரமான நிலை நமது நிதி அமைச்சர் அவர்களுக்கு ஆவடி மாநாட்டிலே ஏற்பட்டு விட்டது. ஆனால் இந்த சட்டசபையைப் பொறுத்த மட்டும் மலையாளம், கன்னடம் அங்கத்தினர்கள் இருந்தாலுங்கூட, அவர்கள் எல்லாம் சகோதர நாட்டை, திராவிட நாட்டைச் சார்ந்தவர்கள், அவர்கள் ஒன்றும் கிளர்ச்சி செய்யமாட்டார்கள் என்ற தைரியத்தோடு தமிழிலே அச்சடித்துக்கொடுத்திருப்பதற்கு மீண்டும் நிதி அமைச்சரை பாராட்டுகிறேன். ஆனால் அதிலும் ஒரு குறை இருக்கிறது. இப்போது கொடுத்திருப்பது ஆங்கிலத்திலே உள்ளதை தமிழிலே மொழி பெயர்த்து கொடுத்திருப்பதேயாகும். வருகிற ஆண்டு எளிய, இனிய தமிழிலேயே எழுதித்தரவேண்டும். அதுவும் நிதி அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் கைப்பட எழுதித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். காரணம், பச்சையப்பன் கல்லூரியிலே பேசுகின்றபோது, நிதி அமைச்சர் அவர்கள் தமிழ் மொழியைப்பற்றி பிரமாதமாகப் பேசியிருக்கிறார்கள். சட்டசபை மெம்பர்களைக் காட்டிலும் மாணவர்கள் தமிழில் பேசுகிறார்கள் என்றும், தானும் நன்றாகத் தமிழில் பேசமுடியுமென்று கூறியுள்ளார்கள். அந்த நம்பிக்கையோடுதான் இதைக் கூறுகின்றேன்.

'' இந்த நேரத்தில் ஆளும் கட்சியினரைப் பாராட்டிப் பேசுகின்றபோது ஆட்சியாளர்கள் முகத்தில் சந்தோஷமும், சிரிப்பும் ஏற்படுகின்றது. ஆனால் எதிர் தரப்பிலிருந்து குற்றங் குறைகளை நல்லமுறையில் எடுத்துச்சொன்னால் முகம் சுருங்குவதைப் பார்க்கின்றோம். நியாயமானக் குறைகளைச் சொல்வதற்குத்தான் எதிர் கட்சியினர் இருக்கின்றனர். எதிர்கட்சியை இன்றையதினம் ஆட்சியாளர்கள் எதிரிக்கட்சியாக கருதுகின்றனர். அது தவறு என்று கருதுகின்றேன்.

'' ஆங்கிலேயருடைய அரசியல் சட்டத்தைக் கடைப்பிடித்து நமது இந்திய அரசியல் சட்டமும் திட்டப்பட்டிருக்கிறது. அந்த முறையிலே பார்த்தால், மேல்நாட்டில் பார்லிமெண்டிலே எதிர் கட்சித் தலைவருக்கு தனி சம்பளம் கொடுத்து, மிகுந்த மரியாதையுடன் மதிக்கப்பட்டு வருகின்றனர். அந்த முறையிலே எதிர் கட்சியினருக்கு மதிப்புக் கொடுப்பது சர்க்காரினுடைய கடமையாகும். ஆனால் இன்றைய தினம் நம்முடைய அரசாங்கம் அவ்வாறு நடைபெறுகின்றதா என்றால், இல்லை. சாந்திய தத்துவப்படி, ஒரு குறிப்பட்ட கொள்கையின் அடிப்படையில், காங்கிரஸ் கட்சியினர் போனால் அரசாங்கம் அமைக்கப்படாமல் காமன்வீல், உழைப்பாளியாட்களை சேர்த்து காங்கிரஸ் ஐக்கிய முன்னணிஅரசாங்கம் நடத்துகின்ற பரிதாபகரமான நிலைதான் இன்றையதினம் ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். காங்கிரஸ் ஓட்டு எண்ணிக்கையை பலப்படுத்துவதற்காக எதிர் கட்சியிலுள்ள உறுப்பினர்களையெல்லாம் கொள்கை ரீதியை விட்டு சேர்த்துக்கொண்டுள்ள காரணத்தினால்தான் மக்களுடைய நன்மைகள் தட்டிக்கழிக்கப்பட்டு வருகின்றன. அதனால் நாட்டில் இன்றையதினம்

க்களுடைய பிரச்னை தீருவதற்கு வழியில்லை. அதிலும் குறிப்பாக எங்கள்

[Sri A. Govindaswamy Nayagar] [4th March 1955

தென் ஆற்காடு மாவட்டத்திலே கடந்த 4 ஆண்டுகளாக எந்தவிதமான முன்னேற்றமோ நன்மையோ செய்ததாக சொல்ல முடியாது. வேண்டுமானால் நிதி அமைச்சர் அவர்கள் திறந்துவைத்த சில புதிய ஓர் ஆசிரியர் பள்ளிக்கூடங்களைச் சொல்லலாம். அதைத் தவிர எங்கள் தொகுதியில் வேறு எந்தவிதமான நன்மைகள் செய்தார்கள் என்று இந்தச் சபையில் துணிந்து கேட்கின்றேன்.

"ஐந்து ஆண்டுத் திட்டத்திலே நான்கு ஆண்டுகள் கழிந்துவிட்டன, எனினும் ஏதாவது புதியதாக பாலங்களோ, புதியபுதிய ரோடுகளோ இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள கம்யூனிடி பிராஜக்ட் பேரால் செய்தார்களா என்றால் இல்லை. சிதம்பரத்தில் ஒரு பகுதியிலுள்ள சில பிர்காக்களை மட்டும் சமுதாய நலத்திட்டத்தின் கீழ் எடுத்துக்கொண்டிருக்கிறார்களே தவிர வேறு எந்த நன்மையும் இதுவரை செய்யவில்லை.

"இன்றையதினம் சோஷியலிச அடிப்படை உருவாகிக் கொண்டும், உருவாக்கப்பட்டும் வருகிறது என்று நேரு அவர்கள் சொல்லிப்போனார்கள். ஆனால் இவர்கள் தயாரித்துள்ள பட்ஜெட்டைப் பார்க்கின்றபோது சோஷியலிச வாடைகூட வீசவில்லையென்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே துணிந்து கூற விரும்புகிறேன். எவ்வளவு சொல்லியும் ஐந்து ஆண்டு திட்டத்தின் கீழ் வடநாட்டை வளம்பெற்றதாக செய்துகொள்கிறார்களே தவிர, தென்னாட்டைப் புறக்கணித்து இருக்கிறார்கள். இதை நாங்கள் மட்டும் சொல்லவில்லை. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஸ்ரீமதி அம்புஜம் அம்மாள் அவர்களே ஆவடி மாநாட்டிலே கூறினார்கள். நிதி அமைச்சர் அவர்களும் இவ்வாறு கூறியிருக்கிறார்கள். ஐந்து ஆண்டு திட்டத்தில் தென்னாட்டை கவனிக்காவிட்டால் இங்கு ஒரு பெரிய எதிர்ப்பு சக்தி உருவாகக்கூடுமென்றும், ஆகவேதான் இதை கவனிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டுள்ளார். இன்றைக்கு காங்கிரஸ் ஒரு அகில இந்திய ஸ்தாபனமாக விளங்குகின்றது என்று கூறுகிறார்கள். ஆனால் அவ்வளவு பெரிய ஸ்தாபனமாக இருந்தும்கூட, தென்னாட்டைப்பற்றி வடநாட்டாரை ஏதாவது கேட்க வேண்டுமானால் அஞ்சுகின்றனர். தென்னாட்டில் தொழில் வளரச்செய்ய இதுவரை ஒன்றும் செய்யவில்லை. நெய்வேலி வேலையை துரிதப்படுத்தப் படவில்லை.

"அடுத்து, எங்கே நாட்டில் இன்று சோஷியலிஸ அடிப்படை நிலவுகிறது என்று பார்ப்போம். இன்றையதினம் இந்த நாட்டைவிட்டு வெள்ளைக்காரர்கள் சென்றுவிட்டார்களே தவிர பொருளாதாரத் துறையில் இன்றைக்கும் சுரண்டிக்கொண்டுதான் வருகிறார்கள். இன்றைக்கும் பாரி கம்பெனி, பென்னி கம்பெனி இருக்கின்றன. அதைப்போல் இன்னும் பல கம்பெனிகள் இருந்துவருகின்றன. அதையெல்லாம் இந்த சர்க்கார் தேசிய மயமாக்குவதற்கு திட்டங்கள் வைத்திருக்கிறதா என்றால் இல்லை. நிலச்சீர்திருத்தம் செய்யப்போவதாக சொல்லிக்கொண்டு வருகிறார்கள். ஆவடி மாநாட்டிலும் அதற்காக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஆனால் அதைப்பற்றிய அறிகுறியே ஒன்றும் காணோம். பின் வேறு எந்தத் துறையில் நாடு இன்றையதினம் முன்னேறியிருக்கிறது என்பதைப் பார்ப்போம். சென்னையை எடுத்துக்கொண்டால் வியாபாரம் பூராவும், அதிலும் சில்க் துணி வியாபாரம் பூராவும் வடநாட்டார் ஆதிக்கத்தில் இருக்கிறது. இதற்கு அத்தாட்சி, சைனா பஜாரையும், மவுண்ட் ரோட்டிலுமுள்ள ஜவுளிக் கடைகளையும், தங்கம், வெள்ளி சாமான்கள் விற்கும் கடைகளையும் பார்த்தாலேபோதும். தவிர, வட்டிக்கடைகள் பூராவும் அவர்கள் கையிலிருக்கிறது. இவ்வாறு பலவிதத்திலும் நம்நாட்டுப் பணத்தை சுரண்டிக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்க முயற்சிக்கப்பட்டதா? இல்லை. எங்கே சோஷியலிஸ அடிப்படை இருக்கிறது? ஆவடி மாநாட்டிலே பளபளப்பான உடைகளை அணிந்துகொண்டு, மாநாட்டுக்கு லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்து, சோஷியலிஸம்பற்றி பேசிவிட்டால் போதுமா? அம்மகாநாட்டில் பேசியது பூராவும் தேர்தல் பிரச்சாரத்திற்காகவே ஒழிய, உண்மையில் சோஷியலிஸ அடிப்படை பற்றியே அல்ல என்று திட்டவட்டமாகக் கூறலாம். உண்மையில் நாங்களும் சோஷியலிஸ அடிப்படையை வரவேற்கிறோம். ஆனால் அதற்கான அறிகுறியைக்கூட காணோத்து

4th March 1955] [Sri A. Govindaswamy Nayagar]

கண்டுதான் வருத்தமேற்படுகிறது. வடநாட்டு ஆதிக்கத்தில் இருக்கக்கூடிய இலாகாவைச் சேர்ந்த குமாஸ்தாவின் சம்பளத்தையும் (அதாவது தபா லாபீஸ், இன்கம்டாக்ஸ் ஆபீஸ் போன்றது), N.G.O.-க்களுடைய சம்பளத் தின் வித்தியாசத்தையும் பார்ப்போம். பெருத்த வித்தியாசம் காணப்படு கிறது. ஏன் அந்த வித்தியாசம்? இந்த நிலைமையில் விவசாயிகள், பொது மக்கள்மீது வரிவிதிக்க வேறு இந்த அரசாங்கம் முன்வந்திருக் கிறது?

"பல ராஜ்யங்களின் பட்ஜெட்டைப் பார்க்கின்றபோது அங்கெல்லாம் பற்றுக்குறை பட்ஜெட்டை சரிக்கட்டுவதற்காக வரி போடுவதாகக் காணப்பட வில்லை. இங்குமட்டும் விவசாயிகளுக்கு மேலும் 2 அணு வரி போடப்படுவ தற்கு காரணம் என்ன? இந்த சமயத்திலே விலை வீழ்ச்சியின் காரணமாக வும், வாங்கியக் கடனை திருப்பிக் கொடுக்க முடியாத நிலைமையிலும் அவர் கள் இருக்கின்றார்கள். தவிர, ஏழைகள் அதிகமாக உபயோகப்படுத்தும் புகையிலை மீது வேறு வரி போடப்பட்டிருக்கின்றது. நான் புகையிலை குடிப்ப வனுமல்ல சுவைப்பவனுமல்ல. இருந்தபோதிலும் இது நாட்டிலுள்ள ஏழை மக்களை எந்த நிலைக்கு கொண்டுபோகும் என்பதை ஆட்சியாளர்கள் சிறிது சிந் திக்கவேண்டும். இந்த வருவாயை ஸ்தல ஸ்தாபனங்களுக்குக் கொடுப்பதற் காகவே வசூலிக்கப்படுகிறது என்று சொல்லப்படுகின்றது. நானும் ஒரு ஜில்லா போர்டு மெம்பர்தான். அதற்கு கொடுப்பதற்காக ஏழைகளிட மிருந்தா மேலும் வசூலித்துக் கொடுக்கவேண்டும்? மோட்டார் வண்டிகள் மூலம் வரும் வருவாய் பூராவும் ஏன் ஜில்லா போர்டுகளுக்குக் கொடுக்கக் கூடாது? கடைத் தேங்காயை எடுத்து, வழிப் பிள்ளையாருக்கு உடைப்பது போல் அல்லவா நிதி அமைச்சருடைய இந்த வரிதிட்டம் அமைந்திருக்கிறது."

TEMPORARY CHAIRMAN (Sri P. G. Karuthiruman) :—

"The hon. Member should not make personal attacks. A ruling has already been given in this regard."

***Sri A. GOVINDASWAMY NAYAGAR** :—"இரண்டாவது ஐந் தாண்டுத் திட்டத்திலே தென்னுற்காட்டிலுள்ள கோமுகி, மணி முத்தாறுத் திட்டங்கள் இருப்பதாகச் சொன்னார்கள். ஆனல் பட்ஜெட்டைப் பார்க்கின்றபோது அது எங்கேபோனது என்றே தெரியவில்லை. இன்றைய தினம் எங்கே பார்த்தாலும் பாடசாலைகள் திறந்து வைக்கப்படுகின்றன. 2,800 பாடசாலைகள் இதுவரை திறக்கப்பட்டுள்ளதாகவும், இன்னும் 1,500 பாடசாலைகள் திறக்கப்போவதாகவும் கூறுகிறார்கள். ஆனல் ஆயிரக்கணக் கான ஜனத்தொகையுள்ள பல கிராமங்களில் இன்னும் பாடசாலைகள் திறக்கப்படவில்லை. அப்படி வேண்டுமென்று கேட்டாலும், அது ஸ்கூல் லெஸ் செண்டர் அல்ல என்று புறக்கணிக்கப்படுகின்றது.

"அரசாங்கத்தார் புதியதாக இப்பொழுது ஓராசிரியர்கள் பள்ளிகளை நிறுவி வருகிறார்கள். இது நடைமுறைக்கு சரியானதல்ல. இன்னும் நிறுவப்போவதாகவும் சொல்லுகின்றார்கள். 90 பிள்ளைகள் உள்ள ஒரு வகுப்பில் ஓராசிரியர் எப்படி அவர்களுக்கு ஒழுங்காக பாடம் சொல்லித்தர முடியும்? சும்மா பிள்ளைகளை மடக்கி வைத்துக்கொள்வதுதான் முடியும். இன்னும் 1,200 ஆசிரியர்களை நியமிக்கப் போவதாகவும் கூறுகிறார்கள். 4,300 பாடசாலைகளுக்கு 1,200 ஆசிரியர் போதுமா என்று கேட்கிறேன். பிள்ளைகள் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆசிரியர் நியமிக்கவேண்டும்—நிரந்தர மாக ஓர் ஆசிரியர் பள்ளியாக இருக்கக்கூடாது.

"இன்றையதினம் சமுதாய நலத்திட்டம், ராஜா சர் முத்தையாச் செட்டியார் அவர்கள் சொல்வதுபோல், ஒரு குறிப்பிட்ட இடங்களுக்குத்தான் இப்பொழுது விஸ்தரிக்கப்பட்டு வருகிறது. தென்னுற்காட்டில் செஞ்சி, விக்கிரவாண்டி முதலிய பகுதிகளெல்லாம் மிகமிக பிற்போக்கான நிலை மையில் இருக்கின்றன. அந்தப் பகுதிகளையெல்லாம் விஸ்தரிக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கடைசியாக இம்மந்திரி சபையில் என் னுடைய சமூகத்தைச் சேர்ந்த கனம் மாணிக்கவேலு நாயகர், கனம் ராமசாமி படையாச்சி ஆகிய இரண்டு பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இருப்பது

சிலருக்கு பொறுமையும்கூட. ஆனால் அவர்கள் ஒன்றும் செய்யமுடியாத நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றனர். காரணம் என்னவென்றால் ஏதாவது செய்தால் மந்திரி பதவி போய்விடுமோ என்ற பயமோ? என்னவோ? இதுவரை ஒன்றும் செய்யவில்லை. நேரம் கடந்துவிட்டமையால் இதற்குமேல் பேச முடியவில்லை."

9-44 p.m. *SRI P. G. MANICKAM :—" மதிப்பிற்குரிய சபைத் தலைவர் அவர்களே, 1955-56-ம் வருஷத்தில் வரவு செலவு திட்டத்தை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். கிராம மக்கள் சுபிட்சமாக வாழ்வதற்கு குடி தண்ணீர் மிக மிக அவசியமாக இருக்கிறது. இந்த ஆண்டு பட்ஜெட்டில் 70 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். மேலும் அதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால் 2-வது ஐந்தாண்டு திட்டத்தில் இந்த கிணறு வசதி செய்வதற்கான வேலைகளும் எடுத்துக் கொள்ளப்படும், என்று இந்த பட்ஜெட்டின் பிரசங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அநேகமாக கிராமங்களை எடுத்துக்கொண்டால் கிணறுகள் இல்லாமல் ஜனங்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். பொதுவாக ஹரிஜனங்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். இதைப்பற்றி கலெக்டருக்கு அடிக்கடி எழுதிக்கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் இப்பொழுது குடித்தண்ணீர் வசதியை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன் வந்தது போற்றத்தக்கது. அரசாங்கம் இதற்காக ஒரு பெரும் தொகையை இந்த ஆண்டு பட்ஜெட்டில் ஒதுக்கியுள்ளார்கள்.

" இப்பொழுது ஹரிஜனங்களுக்கு பள்ளிக்கூட சம்பளம் கட்ட வேண்டியதில்லை. பின் தங்கிய வகுப்பினருக்கு பாதி-சம்பள சலுகை அளிக்கப்பட்டு வருகிறது. நடுத்தர வகுப்பினருக்கு கல்வி வசதி அளிப்பதற்காக 50 லட்ச ரூபாய் சர்க்கார் ஒதுக்கியிருக்கிறார்கள். இந்திய அரசாங்கம் வேறு கல்வி வசதிக்காக பணம் கொடுக்கிறார்கள். முதல் வகுப்பிலிருந்து மூன்றும் பாரம் வரையிலும் சலுகை அளிக்கப்படுகிறது என்று சொல்லுகிறார்கள். ஆனால் ஏழை மக்களுக்கு சலுகை இருக்கிறதா என்று கேட்கிறேன். கிராமத்தில் படிக்கும் ஏழை குழந்தைகளுக்கு புஸ்தகம் வாங்குவதற்காக ஒரு பத்து லட்ச ரூபாய் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்."

THE HON. SRI S. S. RAMASAMY PADAYACHI :—" முதல் வகுப்பிலிருந்து 8-ம் வகுப்பு வரையிலும் இலவசக் கல்வி அளிக்கப்போகிறார்கள். அவர்கள் அதற்காக சார்ஜ் கொடுக்கவேண்டிய தில்லை. இதில் சந்தேகம் ஒன்றும் வேண்டாம்."

*SRI P. G. MANICKAM :—" அவர்களுக்கு சம்பளம் இல்லை என்பதை நானும் ஒப்புக்கொள்ளுகிறேன். நான் சொல்லி வருவதெல்லாம் 50 லட்சத்திலிருந்து ஹரி ஜன குழந்தைகளுக்கு புஸ்தகம் ஸ்லேட் வாங்குவதற்கு பணம் ஒதுக்கப்படவில்லை என்பதுதான். ஆகையால் தான், 8-ஆம் வகுப்பு வரைக்கும் இலவசக் கல்வி கற்பதற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் 50 லட்சம் ரூபாயிலிருந்து ஏழைகள், ஹரிஜனங்கள் ஆகியவர்களுடைய குழந்தைகளுக்கு புத்தகங்கள், சிலேட்டுகள் போன்ற பள்ளிக்கூட சாமான்கள் இலவசமாக வாங்கிக் கொடுப்பதற்கு குறைந்தது 10 லட்சம் ரூபாயாவது ஒதுக்கப்படவேண்டும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

" 1955-56-ஆம் வருஷ பட்ஜெட்டிலே ஹரிஜன அபிவிருத்திக்காக 1,09,36,600 ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இத் தொகையிலே—

| | ரூ. |
|---|---|
| (1) ஆபீஸ் நிர்வாக செலவுகளுக்காக .. .. .. .. | 34,19,200 |
| (2) மதமாறிய ஹரிஜனங்களுடைய கல்வி வசதிகளுக்காக .. | 11,18,600 |

4th March 1955] [Sri P. G. Manickam]

| | | ரூ. |
|---|---|---|
| (3) கள்ளர், குறவர் அபிவிருத்திக்காக | .. .. .. | 8,28,500 |
| (4) பிற்பட்ட வகுப்பினர் சலுகைகளுக்காக | .. .. .. | 12,85,300 |
| (5) இதர செலவினங்களுக்காக | .. .. .. .. | 4,73,600 |
| ஆக | .. | 71,25,200 |

ஹரிஜன அபிவிருத்திக்காகச் செலவிடப்படுவது .. .. 38,12,400

இத்தொகையிலே ஸ்காலர்ஷிப்புக்காகச் செலவிடப்படும் தொகை ரூ. 5,98,200 மாத்திரமே. சென்ற வருஷமும் இதே தொகைதான் ஒதுக்கப்பட்டது. சென்ற வருஷமே புதிதாக ஸ்காலர்ஷிப் கோரி விண்ணப்பம் செய்த ஆயிரக்கணக்கான ஹரிஜன மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப்புக்கள் கிடைக்கப்படவில்லை. ஆகையால் சென்ற வருஷம் 40 எம்.எல்.எக்கள் கையொப்பமிட்டு ஹரிஜனப் பிள்ளைகளினுடைய ஸ்காலர்ஷிப் விஷயமாக ஒரு மனு கனம் மந்திரி அவர்களிடம் கொடுக்கப்பட்டது. அதற்கு ஒரு பதிலும் இல்லை. போன வருஷமும் கொடுக்கப்படவில்லை. இந்த வருஷமாகிலும் அரசாங்கம் ஸ்காலர்ஷிப் கொடுக்குமா? அதிகமாக கொடுப்பதற்கு வசதி இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்."

Sri K. P. GOPALAN :—" Mr. Chairman, I wish to make a few observations on the Budget introduced by the Hon. the Minister for Finance. When the Hon. the Minister for Finance introduced the Budget, my first reaction was that he was trying to do some propaganda for the Party in power. I welcome one feature in the Budget. It relates to the decision of the Government to exempt all poor children from the payment of school fees up to III Form. That is a very welcome step indeed. With regard to the new taxation measures introduced by the Government, I am of opinion that they should be opposed by all parties. I heard, Sir, even hon. Members belonging to the Congress Party stating on the floor of this House that they could not tolerate these new taxation measures. The introduction of the new taxation measures amounts to 'adding insult to injury'. With regard to the progress of the Five-Year Plan, I also agree that some advance has been made on the food-front and in some sectors of industry. I am not going to dispute that fact. But I should like to ask, what has the Government done with regard to the handloom and other cottage industries in our country? The other day, the Hon. the Minister for Labour admitted on the floor of this House that fourteen factories were closed in Malabar and thousands of workers were thrown out of employment. I agree that some progess has been made in the textile sector. But, I need not state here that mill-owners produce more cloth not for the benefit of the people of this country but for the purposes of exporting them to other countries and earning profits. I need not explain all those things here. I wish only to state that whatever things are produced for the consumption of our people, the big capitalists of our country want to export them to foreign countries and make more and more profits. That is the real situation in the country. With regard to the objective of the Five-Year Plan,

9.54 p.m.

[Sri K. P. Gopalan] [4th March 1955

I should like to state that firstly it should solve the problem of unemployment in the country and secondly it should stabilise the prices of commodities. Our Finance Minister, during a speech made on the floor of this House, two years ago, stated that within a few months the prices of commodities would be stabilised, that the peasants would be able to get increased prices for their products, and that the people generally would lead a better life. This is how the Hon. the Finance Minister spoke two years ago. There is no difference on questions of increasing the national wealth of the country through industrialisation. But, there is this difference of view between the Opposition and the Government. The Opposition want that the Government should be able tc solve the problem of unemployment that is facing our State to-day through the Five-Year Plan. The unemployment problem is the most important problem facing our country. The unemployment problem has become a national problem in our country. The Central Government have introduced the rationalisation system in the textile sector. What is meant by this rationalisation system?

10 p.m. " It means that they want to send out seven lakhs of workers from the factories by bringing in new machinery and speeding up all the machines; also they want to increase the work-load by that and they want to send away lakhs of workers; and the factory owners and big capitalists in our country call it ' rationalisation of industries '. What has the Central Government, the Congress Government at the Centre, done about that? They want to help the bigger capitalists of our country by giving them 200 crores of rupees as loan for carrying out this rationalisation work. From that we can understand, I am sure, what the policy of that Government is.

" Sir, there is one difference between the Congress Government and the Opposition Party. We are not opposed to taxation, but what we want is that whenever the Government want to bring in taxation, they must tax the richer classes and not the poor people. When the Government brought forth the Agricultural Income-tax on Plantations we unanimously supported that measure and we said that they should put increased rates of taxation and we gave notice of amendments to that effect. But then the Governor's objection came and we were forced not to move the amendment. What we thought at that time was that if the Government taxed at higher rates, they should get more money from the richer classes and that money could be utilised for the betterment of the people, for eradicating the unemployment problem asd also alleviating the distress of the working class and the toiling masses of our country by bringing in a good piece of legislation.

" Regarding the National Extension Services, I beg to state one or two words. With regard to National Extension Schemes the Government say that 50 per cent of the expenditure should be met from public contribution. Sir, we are not against that, if

4th March 1955] [Sri K. P. Gopalan]

people are prepared to contribute. But the fact is that our people are not in a position to contribute. I know for instance there is a village in my constituency called Muniyar. A bridge has to be constructed there and a sum of Rs. 14,000 is necessary for the construction. The Panchayat Board has sanctioned Rs. 7,000, but the people are not in a position to contribute the balance towards the scheme, because the people are very backward and very poor. So what I want to suggest is that whenever Government take up these kinds of plans, they should see the position of the poor villagers, their bad economic conditions and their incapacity to pay. For that I have a suggestion. We are ready to co-operate with the Government and make any plan a successful one. But then the people should no be asked to contribute anything, because they are unable to do so. But there are unspent balances with Government and such sums should be utilised for other schemes. For instance there was a meeting at Payyanoor, when the Collector said that out of the funds allotted for the Local Development Schemes a sum of 8 lakhs of rupees were left unspent; then the Collector was asking the Block Development Officer how to spend that money. It was decided that schemes for spending that money had to be sent back to Government and the balance was actually not spent. I feel that either the Block Development Officer, or the Collector of Malabar or other officers concerned never announced to the public and leaders of the people that the Government wanted to spend and they never formulated schemes openly and they did not take care to spend the money for the benefit of the people. So I suggest such unspent moneys must be spent on other schemes and Government must see that the National Development Schemes are successful ones in that way.

" Sir, so far as Malabar is concerned, there is a general feeling that Malabar, Travancore and Cochin would be formed into a Kerala linguistic State; that the Madras Government are probably thinking that in case such a State is formed in future, why should they (Madras Government) spend much money for Malabar. That is the feeling among the public of Malabar. I never want to exaggerate anything here, but I know for certain that that is the general feeling of Malabar. Even on the floor of this House our Health Minister was saying that he was going to construct two blocks in the Calicut Hospital, but there is no provision made in the Budget, regarding the Tellicherry Brennen College, no provision for money is made; for constructing buildings in the Badagara hospital, there is no provision made in the Budget. Regarding protected water-supply I want to say that only in Calicut there is provision for protected water-supply, but for other places there is no scheme.

" I have to speak about so many other things, but there is no time. I want to say one or two words about the Police Department. Sir, large sums are spent by the Government for the

[Sri K. P. Gopalan] [4th March 1955

Police in Malabar. Surely I feel that Government should see whether the money is spent in a useful manner or not. Even on the floor of this House instances of murder in Malabar have been brought to notice. The position in Malabar is that if a person has about 200 rupees in his hand, he can surely kill another person, give some money to the Police Sub-Inspector or Circle Inspector and save himself. That is the position everywhere in Malabar. There is no security of property or personal life. I can quote so many example which I personally know. In all such cases evidences have been forthcoming from the people, but the Police have never cared to investigate . . .''

THE HON. SRI S. S. RAMASAMY PADAYACHI :—'' Any specific cases? ''

SRI K. P. GOPALAN :—'' I can quote so many specific cases . . .''

TEMPORARY CHAIRMAN (Sri P. G. Karuthiruman) :—'' The hon. Member's time is up.''

SRI K. P. GOPALAN :—'' One minute, Sir.''

TEMPORARY CHAIRMAN (Sri P. G. Karuthiruman) :—'' Order, order. The hon. Member Sri Salih Maraikayar will speak now.''

10-07 p.m. SRI MOHAMED SALIH MARAIKAYAR :—'' கனம் தலைவரவர்களே, நமது கிராம மக்களின் நலத்தையும், சுபிட்சத்தையும் கருத்தில் கொண்டு, சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள், தேசீய வளர்ச்சித் திட்டங்கள், ஸ்தல அபிவிருத்தித் திட்டங்கள் போன்ற நல்ல திட்டங்களை வகுத்து, இந்த வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்ததற்காக கனம் நிதி மந்திரி அவர்களை நான் பாராட்டுகிறேன். இந்த வரவு செலவுத் திட்டத்தில் சில குறைபாடுகளிருக்கின்றன. ஆனால் அவைகள் நிதி மந்திரியின் கவனக் குறைவால் எற்பட்டது அல்ல என்று நான் நினைக்கிறேன். நமது நாட்டில் எந்தக் காரியத்தைச் செய்தாலும், திருஷ்டிப் பரிகாரத்திற்காக ஒரு குறையை உண்டுபண்ணுவது சகஜம். சினிமா நட்சத்திரங்கள் மனதைக் கவரும் முறையில் அலங்கரித்துக்கொண்டாலும், திருஷ்டிப் பரிகாரத்திற்காக கன்னத்தில் ஒரு கரும்புள்ளியை வைத்துக்கொள்ளுகிறார்கள். நமது சிருஷ்டி கர்த்தாவான கடவுள் கூட, சந்திரன் எவ்வளவு பிரகாசமாகத் தோன்றியபோதிலும், நடுவில் ஒரு மச்சத்தை உண்டுபண்ணியிருக்கிறார். ஆகவே, எந்தக் காரியத்தைச் செய்தாலும், ஒரு குறைபாடு இருக்கவேண்டுமென்பது நமது நாட்டில் ஒரு கொள்கையாக இருந்து வருகிறது. ஆகவே நமது நிதி மந்திரி அவர்களைக் குறை கூறுவதற்குக் காரணமில்லை.

'' இந்த மாதிரி கிராம மக்களின் சுபிட்சத்தைக் கருதி வகுத்திருக்கும் இந்த பட்ஜெட்டில், நமது நாட்டிற்கு முதுகெலும்பான விவசாயிகள் மீது போட உத்தேசித்திருக்கும் இந்த 'சர்சார்ஜ்' கட்டணம் விரும்பத்தக்கதல்ல. இது விவசாயிகளுக்குப் போடப்பட்ட வரி அல்ல, நில உடமைக்காரர்களுக்குப் போடப்பட்ட வரி என்று சமாதானம் சொல்லப்படுகிறது. தண்ணீர்த் தீர்வைக்கும் அதிகக் கட்டணம் விதிப்பதாயிருந்தால் அது ஒவ்வொரு விவசாயியையும் பாதிக்கும் என்பதை நான் இந்த சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். விலைவாசிகள் மிகவும் குறைவாக யிருந்த காலத்தில் விவசாயிகள் தைரியமாக வரி செலுத்தியிருக்கும்போது, இந்த சொற்ப 'சர்சார்ஜ்' வரியை அவர்கள் செலுத்துவதில்

4th March 1955] [Sri Mohamed Salih Maraikayar]

கஷ்டமிருக்காது என்று சமாதானம் கூறப்படுகிறது. ஆனுல் விலை வாசிகள் குறைவாகயிருந்த காலத்தில், நெல் உற்பத்திச் செலவும் குறை வாகவே இருந்து வந்திருக்கிறது. எற்கனவே ஒரு கலம் நெல்லுக்கு உற்பத்திச் செலவு ரூ. 1-14-6 ஆக இருந்தது. இப்பொழுது மூன்று, அல்லது நான்கு மடங்கு அதிகரித்திருக்கிறது. ஆகவே, இந்த விவசாயி களின் மீது போடப்படும் 'சர்சார்ஜ்' வரிக்குப் பதிலாக, வேறு ஒரு வரி போடலாம் என்று சொல்ல ஆசைப்படுகிறேன். அதுதான் 'பிரசவ வரி.' (சிரிப்பு.) ஒவ்வொரு குடும்பத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு அந்தக் குடும்பத்தின் தரத்தை அனுசரித்து வரி போடலாம். உதாரண மாக, 50 ரூபாய் வருமானமிருந்தால், ரூ. 5 வரி போடலாம். 5,000 ரூபாய் வருமானமிருந்தால், 500 ரூபாய் வரி போடலாம். இப்படி வரி போட்டால், அது பல பிரச்னைகளைத் தீர்க்குமென்று நினைக்கிறேன்."

SRI M. PALANIYANDI :—" கனம் அங்கத்தினர் அவர்கள் எல்லாக் குழந்தைகளுக்கும் வரி போடவேண்டுமென்று சொன்னுர்கள். அவர் களுக்கு எத்தனை குழந்தைகள் என்று தெரிந்துகொள்ள விரும்பு கிறேன்." (சிரிப்பு.)

SRI MOHAMED SALIH MARAIKAYAR :—" பிறந்த குழந்தை களுக்கும் வரி போடவேண்டுமென்று நான் சொல்லவில்லை. இனிமேல் பிறக்கப்போகும் குழந்தைகளுக்குத்தான், அந்தக் குடும்பத் தின் தரத்தை அனுசரித்து, ரூ. 5 முதல் 500 வரையிலும் வரி போட லாம் என்று சொன்னேன். நான் சொன்னபடி வரி போட்டால் பல பிரச்னைகள் தீரும் என்று நினைக்கிறேன். ஜனத் தொகை பெருகுவதின் காரணமாகத்தான் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கிறது என்று சொல்லுகிறுர்கள். இந்த வரிக்குப் பயந்து குழந்தைகள் பெருவதைக் குறைத்துக்கொள்ளலாம். இதைப் பரிசீலனை செய்யும்படி கனம் நிதி மந்திரி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

" அடுத்தபடியாக, என் தாலூக்காவைப் பொருத்த வரயில் சில குறைபாடுகளிருக்கின்றன. அறந்தாங்கி மிகவும் பிற்போக்கான தாலூகா. மனித வாழ்க்கைக்கு வேண்டிய எந்த விதமான சௌகரியமும் அங்கே கிடையாது. ரோடு வசதி, கல்வி வசதி, வைத்திய வசதி ஒன்றுமே அங்கே சரிவர அளிக்கப்படவில்லை. இந்தத் தாலூக்காவில் இரண்டு ரோடுகள், ஜில்லா போர்டாரால் சரிவர பராமரிக்கப்படாமல் மிகவும் பிற் போக்கான நிலையிலிருக்கின்றன. அந்த ரஸ்தாக்களை 'ஹைவேஸ் டிபார்ட்மெண்ட்' எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

" நீர்ப்பாசன வசதியைப் பற்றி நான் இங்கே பன்முறை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். நரசிங்கக் காவேரி என்று ஒரு சானல் இருக் கிறது. சில காலத்திற்கு முன்பு அதை அறந்தாங்கித் தாலூக்காவுக்கு விஸ்தரிக்க வேலை எடுத்துக்கொள்ளப்பட்டது. ஆனுல், எந்தக் காரணம் பற்றியோ, ஒரு பகுதி வேலை முடிந்த பிறகு அந்த வேலை நிறுத்தப்பட்டு விட்டது. அதை அறந்தாங்கித் தாலூக்கா தென் கோடி வரை கொண்டு போக வேண்டுமென்று நான் பன்முறை கனம் மந்திரி அவர்களிடம் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அதைப்பற்றி எந்த விதமான நடவடிக் கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. தயவு செய்து ஐந்தாண்டுத்திட்டத் தில் இதையும் சேர்த்து, இந்த நரசிங்கக் காவேரியை அறந்தாங்கித் தாலூக்கா தென் கோடி வரைக்கும் கொண்டு போவதற்கு வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்."

* SRI N. PARAMASIVA UDAYAR :—" கனம் உதவி சபா நாயகர் அவர்களே, எங்கள் பெரம்பலூர் தொகுதியில் எவ்விதமான மின்சார வசதியும் கிடையாது. அந்தத் தொகுதிக்கு மின்சார வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று மூன்று வருஷங்களாக சட்டசபை கூட்டத்தில் கேட்டு வந்திருக்கிறேன். ஆனுல் இதுவரை செய்து கொடுக்கப் படவில்லை. அதை உடனடியாக கவனிக்கவேண்டுமாய் சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். 10-17 p.m.

[Sri N. Paramasiva Udayar] [4th March 1955

" அடுத்தபடியாக எங்கள் தொகுதியில் உள்ள பேரையூர் சின்னுறுத்திட்டம் ஐந்தாண்டுத் திட்டத்தில் இருந்தது. இப்பொழுது சர்க்காரால் அவை கை நழுவி விடப்பட்டதாகத் தெரியவருகிறது. அந்தத் திட்டங்கள் அமுலுக்கு வந்தால் அநேக கிராம மக்கள் தண்ணீர் வசதி பெருவார்கள். உணவுப் பொருள் விருத்தி செய்யவும் வழி யுண்டு. ஆதலால் அந்தத் திட்டங்களை உடனடியாக எடுத்து நிறைவேற்றவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

" எங்கள் தொகுதியில் அனேக கிராமங்களில் ரோடு வசதியில்லாமல் மக்கள் தவிக்கின்றனர். ஆஸ்பத்திரி வசதி வேறு இல்லை. ஒரு கிராமத்தையும் இன்னொரு கிராமத்தையும் இணைக்க சரியான பாட்டை கிடையாது. அந்தக் காடாரம்பப் பிரதேசத்தில் போக்குவரத்து பாதை வசதியை செய்து கொடுக்க சர்க்கார் முன்வரவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

" அடுத்தபடியாக பெரம்பலூரில் கோவாப்ரேடிவ் சொசைடிகள் இருந்து வருகின்றன. அவற்றில் குறைந்த வட்டிக்கு மக்கள் கடன் வாங்குவதற்கு வசதிகள் இருக்கின்றன. ஆனால் பணம்தான் விவசாயிகளுக்குக் கிடைப்பதில்லை. ஒரு வருஷத்திற்கு ஒரு முறை, தலைவர், டைரக்டர் போன்றவர்கள் நியமனம் செய்யப்படுகிறார்கள்.

" கடன் கோரி எந்த விவசாயியாவது மனுப்போட்டால் இவர்கள் கடன் சாங்ஷன் பண்ணுவதற்குள் மறு தேர்தல் வந்துவிடுகிறது. அவர்கள் விஷயம் புரிந்துகொள்வதற்குள் அடுத்த டெலிகேட் தலைவர் வந்துவிடுகிறார். இம்மாதிரி மாறுவதால் உடனுக்குடன் மக்கள் கடன் வாங்கவும் வழியில்லை. சங்கம் உயர்வதற்கும் வழியில்லை. இந்த தேர்தல்களைக் குறைந்தது 3 வருடத்திற்கு ஒரு முறையாக மாற்ற சர்க்கார் முயற்சிக்க வேணுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

" அடுத்தபடியாக சென்ற ஆண்டில் எங்கள் தொகுதியில் அறு மடல் கிராமத்தில் தீ விபத்து ஏற்பட்டதன் காரணமாக பலவிதமான சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. 200 வீடுகளுக்குமேல் எரிந்து சாம்பாலாகியிருக்கின்றன. உடனே தீயை அணைக்கவேண்டுமென்றால் வசதி கிடையாது. அந்தத் தொகுதியில் ஆறு மைல் விஸ்தீர்ணத்திற்குள் **Fire station** எதுவும் கிடையாது. தீ விபத்து ஏற்பட்டதாக டெலிபோன் மூலம் சொன்னால் கூட திருச்சியிலிருந்து தீ அணைக்கும் இயந்திரம் வருவதற்குள் $2\frac{1}{2}$ மணிக்குமேல் ஆகிவிடுகிறது. சென்ற வாரத்தில்கூட செங்கோணம் கிராமத்தில் தீ விபத்து ஏற்பட்டு 350 வீடுகள் எரிந்து இரண்டு லட்சம் ரூபாய்க்குமேல் சேதம் ஏற்பட்டிருக்கிறது. தீ அணைக்கும் இயந்திரம் வருவதற்குள் எல்லாம் சாம்பலாகிவிட்டன. தீ அணைக்கும் படையினர் வந்து எரிந்த சாம்பலைத்தான் கரைத்தார்கள். ஆகவே எங்கள் தொகுதியில் உடனடியாக ஒரு **Fire station** ஏற்படுத்தவேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகிறேன்.

" அடுத்தபடியாக இந்த சட்ட சபைக்கு நாங்கள் வந்து மூன்று வருஷங்களுக்கு மேலாகிறது. ஆனால் சட்ட சபையின் நடவடிக்கை பூராவும் தமிழில் இல்லாததால், சபை நடவடிக்கை எதனையும் எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. கேள்வித்தாள்கள் முதற்கொண்டு ஆங்கிலத்தில் தருகிறார்களே தவிர தமிழில் தருவதில்லை. நாள்பூரா ஒன்றும் புரியாமல் நாங்கள் சபையில் உட்கார்ந்திருப்பதில் என்ன பிரயோஜனம் ? பட்ஜெட் விவரங்கள் அடங்கிய பெரிய பெரிய புத்தகங்களை ஆங்கிலத்தில் அச்சிட்டு, ஆங்கிலம் தெரியாதவர்களுக்குக் கொடுப்பதால் என்ன பிரயோஜனம் ? இங்கு நடக்கும் விஷயங்கள் எல்லாவற்றையும் புரிந்துகொண்டு நாங்கள் மக்களுக்குச் சேவை செய்யவேண்டுமென்றால் உடனடியாக சபை நடவடிக்கை பூராவும், தமிழிலேயே நடக்கும்படி செய்வதோடு, சபை நடவடிக்கை சம்பந்தமாக கொடுக்கப்படும் எல்லாத் தாள்களும் தமிழிலே கொடுக்கவேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகிறேன்.

“எங்கள் தொகுதியிலுள்ள இரண்டு பிர்க்காக்களில் தேசீய விஸ்தரிப்புத் திட்டம் நடந்துவருகிறது. மற்ற பிர்க்காக்களும் ரொம்பவும் பிற்போக்காகவே இருக்கின்றன. அவையெல்லாம் காடாரம்பப் பிரதேசம்தான். ஆகவே இந்த இரண்டு பிர்க்காக்களிலும் தேசீய அபிவிருத்தித் திட்டம் நல்ல முறையில் நடப்பதால், பாக்கியுள்ள எல்லா பிர்க்காக்களுக்கும் இதை விஸ்தரிக்கவேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகிறேன்.

“கடைசியாக ஒரு விஷயம். எங்கள் தொகுதியில் மழையில்லாது விவசாயிகள் வாழ்க்கை நடத்தவே வசதியின்றி ரொம்பவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே சர்க்கார் இப்போது விதிக்க உத்தேசித்திருக்கும் ரூபாய்க்கு 2 அணா சர்சார்ஜை எங்கள் தொகுதி போன்ற காடாரம்பப் பிரதேசத்திற்குமாத்திரம் விதிக்காமல் இருக்கவேண்டுமாய் கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.”

*Sri S. LAKSHMANA KANDAR :—“கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நிதி மந்திரி அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த வரவு செலவுத் திட்டத்தை நான் ஆதரித்துப் பேசுகிறேன். இந்தச் சபையில் உள்ளவர்கள் எதிர்க்கட்சி மெம்பர்கள் உட்பட எல்லோரும் இதை புகழ்ந்து பேசி இருக்கிறார்கள். இதைப் பற்றி ஒரு சிறிய விளக்கம் தருகிறேன். நல்ல அழகுடையவர்களைப் பார்த்தால் கண் திருஷ்டி பட்டுவிடும் என்று சொல்லுவார்கள். அது போல கனம் ஸ்ரீ ஸி. சுப்ரமணியம் தயாரித்திருக்கும் இந்த அழகானபட்ஜெட்டை எல்லோரும் புகழ்ந்து பேசும் பொழுது எங்கே கண் திருஷ்டி பட்டு அவருடைய உற்சாகமும் முயற்சியும் குன்றி விடுமோ என்று தான் வருத்தப்படுகிறேன். ஆண்டவன் அவருக்கு நீண்ட ஆயுளையும் கொடுத்து மக்களுக்காக இன்னும் நல்ல திட்டங்களை வகுத்து அடுத்த வருஷம் இதைவிட சுமுகமான வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்க அவர்களுக்கு நல்ல உற்சாகம் கொடுக்கவேண்டும் என்று கடவுளை பிரார்த்தித்து கொள்ளுகிறேன். 10-24 p.m.

“பொதுவாக நமது அரசாங்கத்தில் வகுத்திருக்கக்கூடிய திட்டங்களில் நீர்ப்பாசன திட்டம் மிகவும் முக்கியமாகும். பெரிய பெரிய அணைத் திட்டங்கள் நல்ல முறையில் அரசாங்கம் முயற்சி செய்து கட்டி முடித்ததினால் மக்கள் நல்ல முறையில் செழிப்புடனிருக்கிறார்கள். உணவு உற்பத்தி பெருகும் என்பதை யறிகிறோம். பெரிய அணைத்திட்டங்களினால் அணைத் தண்ணீர் பாய்ச்சல் உள்ள விவசாயிகளுக்கு மட்டும் சௌகரியம் இருக்கிறது. சிறிய நீர்ப்பாசன திட்டங்கள் விஷயத்திலும் அரசாங்கம் முயற்சி செய்தால் இன்னும் சில விவசாயிகளுக்கு நலம் ஏற்படும். அதனால் நாம் வெளி நாட்டுக்கு உணவுபொருள் ஏற்றுமதி செய்யும் அளவுக்கு தயாராகி விடுவோம். சில கிராமங்களில் குறிப்பாக சர்க்கார் எடுத்துக் கொண்டிருக்கும் கிராமங்களில் சிறு நீர்ப்பாசன திட்டங்கள் சில நிறைவேறியிருக்கின்றன. சர்க்கார் எடுத்துக் கொள்ளாத இனாம் கிராமங்களில் பாழடைந்த ஏரி, குளங்கள் இருக்கின்றன. அவைகளைச் செப்பனிட்டு நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்கலாம். இனாம் கிராமங்களைச் சர்க்கார் எடுத்துக் கொள்ளவில்லையாகையால் ஏரி, வாய்க்கால் இவைகளை மராமத்து செய்வதற்கு ஜில்லா அதிகாரிகள் தங்கள் கையில் அதிகாரம் இல்லை என்று சொல்லுகிறார்கள். அப்படி என்றால் அங்குள்ள மக்களின் கதி என்னவாகிறது. அரசாங்கம் அதற்காக ஏதாவது உத்தரவு செய்தால் நாங்கள் செய்யத் தயாராயிருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆகையினால் ஜமீன்களைச் சர்க்கார் எடுத்துக் கொண்டதுபோல் இனாம் பிரதேசங்களையும் சர்க்கார் எடுத்துக்கொண்டால் அங்கு இருக்கக்கூடிய விவசாயிகளுக்கும் பொது மக்களுக்கும் சௌகரியமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

“இனாம் கிராமங்களில் ஏரி, வாய்க்கால் செப்பனிடுவதற்கும், கடன் கொடுப்பதற்கும் எங்களுக்கு அதிகாரம் இல்லை என்று அதிகாரிகள் சொல்லுகிறார்கள். இப்படிப் பட்ட தொல்லை இருப்பதினால் அங்குள்ள விவசாயிகளுக்கு எந்த சௌகரியமும் கிடைப்பதில்லை. மூன்று வருஷ காலமாக இனாம் கிராமங்களை சர்க்கார் எடுத்துக் கொள்ளப்போவதாக

சொன்னுர்கள். ஆனுல் எந்த விதமான நடவடிக்கைகளும் எடுத்துக் கொள்ளவில்லை. அடுத்த வருஷம் இனும் கிராமங்களுக்கு ஏதாவது வழி செய்தாகவேண்டுமென்று சர்க்காரை கேட்டுக்கொள்ளுகிறேன்.

